بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 7

இதழ் 48

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1444 - ஜமாதில்அவ்வல் 06 ★ ஹிஜ்ரி ஷம்ஸி 1401 - ஃபத்ஹ் 01 ★ 01 டிசம்பர் 2022


## அல்லாஹ்வின் கட்டளை

قَالَ مُوۡسٰی لِقَوۡمِہِ اسۡتَعِیۡنُوۡا بِاللّٰہِ وَاصۡبِرُوۡا ۚ اِنَّ الۡاَرۡضَ لِلّٰہِ ۟ۙ یُوۡرِثُہَا مَنۡ یَّشَآءُ مِنۡ عِبَادِہٖ ؕ وَالۡعَاقِبَۃُ لِلۡمُتَّقِیۡنَ ○

**பொருள் :**
(இதற்கு) மூஸா தமது சமுதாயத்தினரிடம், நீங்கள் அல்லாஹ்விடம் உதவி கோருங்கள். மேலும், பொறுமையைக் கடைபிடியுங்கள். நிச்சயமாக நாடு அல்லாஹ்விற்குரியது. அவன் தன் அடியார்களுள் விரும்புபவரை அதற்கு வாரிசாக்குகிறான். மேலும், (நல்ல) முடிவு இறையச்சமுடையோருக்கே உரியது என்று கூறினார். (அல் அஃராஃப்:129)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## மார்க்கத்திற்காக தலைமையகத்திற்கு வர வேண்டும். மேலும் (தமது) வாழ்வின் நல்ல முடிவிற்கான சீர்திருத்தத்தைக் கருத்தில் கொண்டு இங்கு தங்க வேண்டும்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

### தலைமையகத்தில் குடியிருப்பதன் நோக்கம் மார்க்கமாக இருக்க வேண்டும்

நான் வியாபாரத்திற்காக காதியான் வர விரும்புகிறேன் என்று ஒரு முறை ஒரு நண்பர் கூறினார். அப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: இந்த எண்ணமே தீயதாகும். இதிலிருந்து தவ்பா செய்ய வேண்டும். இங்கு மார்க்கத்திற்காகவே வர வேண்டும். மேலும், (தமது) வாழ்வின் நல்ல முடிவிற்கான சீர்திருத்தம் ஏற்பட வேண்டும் என்ற எண்ணத்துடன் இங்கு தங்க வேண்டும். இந்த எண்ணம் இருந்து, பின்னர் அத்துடன் இங்கு தங்குவதற்கான நோக்கத்தை முழுமைய செய்வதற்காக ஏதாவது வியாபாரம் போன்றவற்றை செய்தால் அதனால் எந்த தவறும் இல்லை. அசல் நோக்கம் மார்க்கமாக இருக்க வேண்டுமே தவிர உலகமாக இருக்கக் கூடாது. வியாபாரம் செய்வதற்கு வேறு நகரங்கள் உள்ளன. இங்கு வருவதன் அசல் நோக்கம் ஒருபோதும் மார்க்கத்தை தவிர வேறு எதுவும் இருக்கக் கூடாது. பின்னர், கிடைப்பவற்றை இறைவனின் அருளாக கருதுங்கள்.

### படைப்பினங்கள் மீதான அனுதாபம்

எனது நிலையோ இவ்வாறு உள்ளது. அதாவது, நான் தொழுகையில் மும்முரமாக இருக்கும் நிலையில் ஒருவருக்கு (ஒரு) வேதனை ஏற்பட்டு, அவரது அழுகுரல் எனது காதுகளை வந்தடைந்தால் அவருக்கு என்னால் நன்மை பயக்க முடியுமென்றால், நான் தொழுகையை விட்டுவிட்டு அவருக்கு நன்மை பயப்பேன். என்னால் இயன்ற வரை அவருடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வேன்.

ஒரு சகோதரரனின் துன்பத்திலும், வேதனையிலும் அவருக்கு உதவி செய்யாமல் இருப்பது நல்லொழுக்கத்திற்கு எதிரானதாகும். அவருக்கு உங்களால் எதுவுமே செய்ய முடியவில்லையென்றாலும் குறைந்தபட்சம் அவருக்காக துஆவாவது செய்யுங்கள்.

நம்மவர்களையும் தாண்டி மற்றவர்களுடனும், இந்துக்களுடனும் அதுபோன்ற நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துங்கள். மேலும், அவர்களிடம் அனுதாபத்துடன் நடந்து கொள்ளுங்கள்.

இதன் தொடர்ச்சி : 10ம் பக்கம்...

## நபிமொழி

### அழகிய முறையில் கடனை திருப்பிக் கொடுத்தல்

(2306) ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஒரு நபர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வந்தார். மேலும், அன்னாரிடம் (தான்)கொடுத்த கடனைத் திருப்பித் தரும்படி கேட்டார். அவர் உரையாடிய தொனி கடுமையானதாக இருந்தது. (எனவே) நபித்தோழர்கள் அவரை அடிப்பதற்கு முற்பட்டனர். அப்போது, அவரை விட்டுவிடுங்கள். ஏனெனில் கடன் கொடுத்தவர் அப்படி பேசவே செய்வார் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அவருடைய ஒட்டகத்தின் வயதுடைய ஒட்டகத்தை அவருக்கு கொடுத்துவிடுங்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அதை விட சிறந்த ஒட்டகமே உள்ளது என்று ஸஹாபிகள் கூறினர். (பரவாயில்லை) அதையே கொடுத்து விடுங்கள் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். மேலும், கூறினார்கள்: உங்களில் கடனைச் சிறந்த முறையில் திருப்பிக் கொடுப்பவரே உங்களில் சிறந்தவர் ஆவார்.

(புகாரி தொகுதி 4, பாடம்- வகாலத், காதியான் பதிப்பு 2008)

* * * * *

## இறைவனுடன் தனது தொடர்பை உறுதியாக்கிக் கொள்பவரே இறையச்சம் கொண்ட மனிதர் ஆவார்

**எவர் தானும் இறைவனின் பாதுகாப்பின் கீழ் சென்று, உலகையும் இறைவனின் பாதுகாப்பின் கீழ் கொண்டு வருவதற்கு முயல்கின்றாரோ அவர் முஹ்ஸின் ஆவார்.**
**முஹ்ஸின் என்ற அந்தஸ்து (இறையச்சம் கொண்டவராகிய) முத்தகீயின் அந்தஸ்தை விட உயர்ந்ததாகும்**

اِنَّ اللّٰہَ مَعَ الَّذِیۡنَ اتَّقَوۡا وَّالَّذِیۡنَ ہُمۡ مُّحۡسِنُوۡنَ

பொருள்: நிச்சயமாக, அல்லாஹ் இறையச்சமுடையவர்களுடனும், நன்மை செய்கின்றவர்களுடனும் இருக்கின்றான். (அந் நஹ்ல்:129)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு கூறுகின்றார்கள்:

இறைவனுடன் தனது தொடர்பை உறுதியாக்கிக் கொள்பவர் இறையச்சம் கொண்ட மனிதர் ஆவார். மேலும், இறைவனுடனான தொடர்பை அவர் எந்த அளவிற்கு அதிகரித்துக் கொள்ள வேண்டும் என்றால், இறைவன் சுயமே அவரின் அடைக்கலமாகவும், பாதுகாவலனாகவும் ஆகிவிட வேண்டும்.

மேலும், தான் இறைவனின் பாதுகாப்பின் கீழ் சென்றுவிட்ட பிறகு, உலகையும் இறைவனின் பாதுகாப்பின் கீழ் கொண்டு வருவதற்கு எவர் முயற்சி செய்கின்றாரோ அவர் முஹ்ஸின் ஆவார். எனவே, முஹ்ஸினின் அந்தஸ்து இறையச்சமுடையவரின் அந்தஸ்தை விட உயர்ந்ததாகும்.

சில மக்கள் சுயமே நல்லவர்களாக இருக்கின்றனர். ஆனால், பிறரைக் காப்பாற்றுவதற்கு கவலை கொள்வதில்லை. இன்னும்சிலர் பிறரைக் குறித்து கவலை கொள்கின்றனர். ஆனால், தனது சீர்திருத்தின் பக்கம் கவனம் செலுத்துவதில்லை.

இதன் தொடர்ச்சி : 10ம் பக்கம்...

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**மக்காவில் இருந்த காலகட்டத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் இல்லத்திற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தினமும் ஓரிருமுறை சென்று வந்தார்கள் என்ற நற்பேறும், சிறப்பும் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களுக்கு உள்ளது**

**ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா ராஷித் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் உயர்ந்த அந்தஸ்துகளைக் குறித்து ஹதீஸ்களின் ஒளியில் ஈமானை வலுவூட்டுகின்ற பேருரை**

**ஒரு நபி தோன்றினாலே அன்றி, அபூபக்ர் எல்லாரை விடவும் சிறந்தவர் ஆவார்**

**அபூபக்ர் என்னைச் சேர்ந்தவர்: நான் அவரைச் சேர்ந்தவன். அபூபக்ர் இம்மையிலும், மறுமையிலும் என்னுடைய சகோதரர் ஆவார்**

**மதிப்பிற்குரிய அப்துல் பாஸித் சாஹிப் (அமீர் ஜமாஅத் இந்தோனேஷியா) உட்பட நான்கு மர்ஹூம்களின் நற்குறிப்பும் ஜனாஸா காயிப் தொழுகையும்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத் - டில்ஃபோர்டு, இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 28 அக்டோபர் 2022,** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு அகா மாதம் **28ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

பத்ர் சஹாபிகளை பற்றிய நற்குறிப்பில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைப் பற்றிக் கூறப்பட்டுக் கொண்டிருந்தது. அன்னாரது நற்குணங்கள் பற்றி எடுத்துக் கூறப்பட்டுக் கொண்டிருந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் அந்தஸ்து, அன்னாரைப் பற்றி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்ன கருதினார்கள்? அன்னாருக்கு என்ன அந்தஸ்தை அளித்து வந்தார்கள்? ஆகியவை தொடர்பாக சில அறிவிப்புகள் உள்ளன.

மக்காவில் இருந்த காலகட்டத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் இல்லத்திற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தினமும் ஓரிருமுறை சென்று வந்தார்கள் என்ற நற்பேறும், சிறப்பும் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களுக்கு உள்ளது.

(ஸஹீஹுல் புகாரி, கிதாப் மனாகிபுல் அன்ஸார், பாடம், மதீனாவை நோக்கி ஹஸ்ரத் நபி (ஸல்) மற்றும் சஹாபிகளின் ஹிஜ்ரத், அறிவிப்பு எண்:3905)

ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இவர்களை ஸாத்துஸ் ஸலாஸில் படைக்குப் படைத் தளபதியாக நியமித்து அனுப்பினார்கள். நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்து, மக்களில் தங்களுக்கு அதிகம் பிடித்தவர் யார்? என்று கேட்டேன்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ஆயிஷா என்று கூறினார்கள். நான், ஆண்களில் யார்? என்று கேட்டேன். அவரின் தந்தையார் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். பிறகு யார்? என்று நான் கேட்டேன். உமர் பின் கத்தாப் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். பிறகு, இவ்வாறே சில ஆண்களை எண்ணிக் கூறினார்கள்.

(ஸஹீஹ் புகாரி, பாடம்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அருட்கள், ஹதீஸ் 36662)

ஹஸ்ரத் சலமா பின் அக்வா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு நபி தோன்றினாலே அன்றி, அபூபக்ர் எல்லாரை விடவும் சிறந்தவர் ஆவார்.

(கன்ஸுல் உம்மால், தொகுதி 6, பாகம் 11, பக்கம்-248, அறிவிப்பு எண்:32548, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்-2004)

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: என்னுடைய உம்மத்தைச் சேர்ந்தவர்களில், என்னுடைய உம்மத் மீது எல்லாரைவிடவும் அதிகம் கருணையும், பரிவும் காட்டியவர் அபூபக்ர் ஆவார்.

(சுனன் திர்மிதி, அப்வாபுல் மனாகிப், பாப் மனாகிப் முஅஸ் பின் ஜபல்.........அறிவிப்பு எண்:3790)

ஹஸ்ரத் அபூ ஸயீத் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உயர்வான தரத்தில் இருப்பவர்களை அவர்களைக் காட்டிலும் குறைந்த தரத்தில் இருப்பவர்கள், நீங்கள் உதிக்கும் நட்சத்திரத்தைக் காண்பது போன்று காண்பார்கள்.

அதாவது, உயர் தரத்தில் இருப்பவர்களை அவர்களுக்குக் கீழுள்ள தரத்தில் இருப்பவர்கள் இவ்வாறு காண்பார்கள்.

அதாவது, உயர் தரத்தில் இருப்பவர்கள் எந்த அளவு உயர்ந்திருப்பார்கள் என்றால், நீங்கள் உதிக்கும் நட்சத்திரத்தை விண்ணை நோக்கிப் பார்ப்பது போன்று, கீழே உள்ள குறைந்த படித்தரத்தில் இருப்பவர்கள் உயர்ந்த படித்தரத்தில் இருக்கும் அவர்களைக் காண்பார்கள். அதாவது, வானத்தின் ஓரத்தில்.

மேலும், அபூபக்ர் மற்றும் உமர் அவர்களைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். அதாவது, அவர்கள் உயர்ந்தவர்கள் ஆவார்கள். உயர இருக்கும் நட்சத்திரத்தைப் பார்ப்பது போன்று மக்கள் அவர்கள் இருவரையும் காண்பார்கள்.

மேலும், கூறினார்கள்: அவர்கள் இருவரும் எவ்வளவு சிறந்தவர்கள்!

(சுனன் திர்மிதி, அப்வாபுல் மனாகிப், பாப் மனாகிப் அபீபக்ர்.........அறிவிப்பு எண்:3658)

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அபூபக்ரைத் தவிர, நாம் திருப்பி கைமாறு செய்து விடாத எவருடைய பேருதவியும், நம் மீது கிடையாது. அவர் நமக்குப் பேருதவி புரிந்திருக்கிறார். அவருக்கு அதற்கான பிரதிபலனை கியாமத் நாளன்று அல்லாஹ் வழங்குவான்.

(சுனன் திர்மிதி, அப்வாபுல் மனாகிப், பாப் மனாகிப் அபீபக்ர்.....அறிவிப்பு எண்:3661)

கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்கள் தமது இறுதி நோயின்போது கூறினார்கள்:

மக்களில் அபூபக்ர் பின் அபூ கஹாஃபாவை விட அதிகம், தனது உயிர் மற்றும் செல்வத்தைக் கொண்டு என்னுடன் நல்ல முறையில் நடந்து கொண்டவர் எவருமில்லை.

நான் மக்களில் எவரையாவது கலீல் எனப்படும் நெருங்கிய தோழராக ஆக்கிக் கொண்டிருந்தால் நிச்சயமாக அபூபக்ரைத் தான் கலீலாக ஆக்கிக் கொண்டிருப்பேன். ஆனால், இஸ்லாத்தின் தோழமை எல்லாவற்றையும் விட உயர்ந்தது. இந்தப் பள்ளியில் அபூபக்ரின் ஜன்னலைத் தவிர மற்ற ஜன்னல்களையும் என் புறமிருந்து அடைத்துவிடுங்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுஸ் ஸாலத்.................. அறிவிப்பு எண்:467)

இது ஸஹீஹ் புகாரியின் அறிவிப்பு ஆகும்.

கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அபூபக்ர் என்னைச் சேர்ந்தவர்: நான்

அவரைச் சேர்ந்தவன். அபூபக்ர் இம்மையிலும், மறுமையிலும் என்னுடைய சகோதரர் ஆவார்.

(கன்ஸுல் உம்மால், தொகுதி 6, பாகம் 11, பக்கம்-248..........அறிவிப்பு எண்:32547, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்-2004)

சுனன் திர்மிதி உடைய அறிவிப்பு இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றிக் கூறினார்கள்:

சொர்க்க வாசிகளில், முன்னவர்கள் மற்றும் பின்னவர்களில் பெரிய வயதுடைய மக்களில் நபிமார்கள் மற்றும் இறைத் தூதர்கள் தவிர, மற்ற அனைவருக்கும் இவர்கள் இருவரும் தலைவர்கள் ஆவார்கள். அலீயே! (இதை) இவ்விருவருக்கும் கூறாதிருப்பீராக!

(சுனன் திர்மிதி, அப்வாபுல் மனாகிப், பாப் மனாகிப் அபீபக்ர்.........அறிவிப்பு எண்:3664)

அன்னார் இதை அறிவித்தபோது, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை இதைக் கூறுவதிலிருந்தும் தடுத்துவிட்டார்கள். இதை அறிவிப்பாளர் கூறுகிறார்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: முஹாஜிர்கள் மற்றும் அன்ஸாரிகளைச் சேர்ந்த தமது சஹாபிகளிடம் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) வெளியே வருகை தருவார்கள்; அமர்வார்கள். அவர்களில், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் இருப்பார்கள். அப்போது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகிய இருவரைத் தவிர வேறு யாரும் தமது பார்வையை உயர்த்தி அன்னாரைப் பார்க்க மாட்டார்கள். அவர்கள் இருவரும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பார்ப்பார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இருவரையும் பார்ப்பார்கள். அவர்கள் இருவரும் அன்னாரைப் பார்த்து புன்சிரிப்பார்கள். அன்னார் (ஸல்) அவ்விருவரையும் பார்த்து புன்சிரிப்பார்கள்.

(சுனன் திர்மிதி, அப்வாபுல் மனாகிப், பாப் மனாகிப் அபீபக்ர்.........அறிவிப்பு எண்:3668)

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: நீர்! சுவர்க்கத்தின் சுனையில் என்னுடைய தோழர் ஆவீர். மேலும், குகையில் என்னுடைய தோழர் ஆவீர்.

(சுனன் திர்மிதி, அப்வாபுல் மனாகிப், பாப் மனாகிப் அபீபக்ர்.........அறிவிப்பு எண்:3670)

ஹஸ்ரத் ஜுபைர் பின் மத்அம் அறிவிக்கிறார்கள்: ஒரு பெண் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்தார். அன்னாரிடம் ஏதோ ஒரு விஷயத்தைப் பற்றி பேசினார். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அதைக் குறித்து ஏதோ வழிகாட்டல் வழங்கினார்கள். அந்தப் பெண், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் தங்களைக் காணப் பெறவில்லை என்றால், அதாவது தங்களுக்குப் பிறகு தங்களுடைய மரணத்திற்குப் பிறகு எனக்குத் தேவை ஏற்பட்டால் நான் என்ன செய்யட்டும்? என்று பணிவுடன் கேட்டார். அப்போது ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்னைக் காணப் பெறவில்லை என்றால் அபூபக்ரிடம் செல்வீராக! அவர் உமது தேவையை நிறைவேற்றி விடுவார் என்று கூறினார்கள்.

(சுனன் திர்மிதி, அப்வாபுல் மனாகிப், பாப் மனாகிப் அபீபக்ர்.........அறிவிப்பு எண்:3676)

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு நாள் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வெளியே வருகை தந்தார்கள்; பள்ளிக்குள் நுழைந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகிய இருவரில் ஒருவர் அன்னாருக்கு வலப்புறமும் மற்றவர் இடப்புறமும் இருந்தார்கள். அன்னார் அவ்விருவரின் கைகளையும் பிடித்திருந்தவாறு இவ்வாறு நாங்கள் கியாமத் நாளன்று எழுப்பப்படுவோம் என்று கூறினார்கள்.

(சுனன் திர்மிதி, அப்வாபுல் மனாகிப், பாப் மனாகிப் அபீபக்ர்.........அறிவிப்பு எண்:3669)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஹன்தப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகிய இருவரையும் பார்த்துக் கூறினார்கள்; இவர்கள் இருவரும் கண்களும், காதுகளும் ஆவார்கள். அதாவது, எனது நெருங்கிய தோழர்களைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

(சுனன் திர்மிதி, அப்வாபுல் மனாகிப், பாப் மனாகிப் அபீபக்ர்.........அறிவிப்பு எண்:3671)

ஹஸ்ரத் அபூ ஸயீது குத்ரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒவ்வொரு நபிக்கும் விண்ணவர்களில் இரு அமைச்சர்களும், மண்ணவர்களில் இரு அமைச்சர்களும் இருப்பார்கள். விண்ணவர்களில் எனது இரு அமைச்சர்கள் ஜிப்ரீல் மற்றும் மீகாயீல் ஆவார்கள். மண்ணவர்களில் எனது இரு அமைச்சர்கள் அபூபக்ர் மற்றும் உமர் ஆவார்கள்.

(சுனன் திர்மிதி, அப்வாபுல் மனாகிப், பாப் மனாகிப் அபீபக்ர்.........அறிவிப்பு எண்:3680)

பின்னர், அவர்களுக்கு சுவர்க்கத்திற்கான நற்செய்தியையும் கூறினார்கள். சயீப் பின் முஸய்யப் கூறினார்கள்:

ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரீ (ரலி) அவர்கள் என்னிடம் கூறினார்கள். அவர்கள் தமது வீட்டில் உளூ செய்தார்கள். பிறகு, வெளியே வந்து கூறினார்கள்; நான் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுடனேயே இருக்கப் போகிறேன். இன்று நாள் முழுவதும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுடனேயே இருக்கப்போகிறேன்.

அதாவது, அந்த நாளை அன்னார் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குத் தொண்டாற்றுவதற்காக அர்ப்பணித்து விட்டார்கள். அவர்கள் கூறினார்கள். அவர்கள் பள்ளிக்கு வந்தார்கள். மேலும், அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பற்றிக் கேட்டார்கள்.

அன்னார் வெளியே புறப்பட்டார்கள். அந்தப் பக்கமாக சென்றார்கள் என்று மக்கள் கூறினர். அவர்கள் கூறுகின்றார்கள். நான் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் பின்னால் சென்றுவிட்டேன். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பற்றிக் கேட்டுக் கொண்டே இருந்தேன். எதுவரை என்றால், ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அரீஸ் கிணற்றுக்குள் (இது குபா பள்ளிவாசலுக்கு அருகில் இருந்த கிணறு ஆகும்) இதில் நுழைந்தார்கள். நான் கதவுக்கு அருகே அமர்ந்து கொண்டேன். அதன் கதவு பேரீத்த கிளைகளால் செய்யப்பட்டிருந்தது.

ஹஸ்ரத் ரஸுல்லாஹ் (ஸல்) அவர்கள் இயற்கை தேவையை நிறைவேற்றிவிட்டு வந்தார்கள். அப்போது ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உளூ செய்தார்கள். நான் எழுந்து ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் சென்றேன். அப்போது ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அரீஸ் கிணற்றின் மீது அமர்ந்திருக்கக் கண்டேன். அன்னார் அதன் மேல் சுவருக்கு நடுவில் இருந்தார்கள். தமது காலிலிருந்தும் ஆடையைத் தூக்கியிருந்தார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவை இரண்டையும் கிணற்றில் தொங்க விட்டிருந்தார்கள். அதாவது, தமது கால்கள் இரண்டையும் தொங்கவிட்டிருந்தார்கள்.

நான் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு ஸலாம் கூறினேன். பிறகு திரும்பி கதவுக்கு அருகில் அமர்ந்து கொண்டேன். நான், இன்று ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காவலாளியாக இருப்பேன் என்று கூறினேன். அதற்குள், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வந்தார்கள். அவர்கள் கதவைத் தள்ளினார்கள். நான், இது யார்? என்று கேட்டேன். அபூபக்ர் என்று அன்னார் கூறினார்கள். சற்று காத்திருங்கள் என்று நான் கூறினேன். பிறகு, நான் சென்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அபூபக்ர் வந்திருக்கின்றார்கள். அனுமதி கேட்கின்றார்கள் என்று கூறினேன்.

அவருக்கு அனுமதி அளியுங்கள். அவருக்கு சொர்க்கத்திற்கான நற்செய்தியையும் கூறுங்கள் என்று ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நான் சென்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம், உள்ளே வாருங்கள்; ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தங்களுக்கு சுவர்க்கத்திற்கான நற்செய்தி வழங்குகிறார்கள் என்று கூறினேன்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உள்ளே சென்று ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ்

(ஸல்) அவர்களுக்கு வலப்புறத்தில் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் சேரந்து கிணற்று சுவற்றில் அமர்ந்து கொண்டார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் செய்ததுபோன்று அவர்களும் தமது கால்களைக் கிணற்றில் தொங்க விட்டுக் கொண்டார்கள்; தமது காலிலிருந்து துணியைத் தூக்கிக் கொண்டார்கள்.

பிறகு, நான் திரும்பி வந்து அமர்ந்து கொண்டேன். உளூ செய்துவிட்டு என்னை சந்திக்குமாறு கூறி நான் எனது சகோதரனை விட்டு வந்திருந்தேன். நான் உள்ளத்தில், அல்லாஹ் இன்னார் குறித்து நன்மையை நாடினால் (அவர்கள் தமது சகோதரரைக் குறித்து கூறினார்கள்) பிறகு, அவரைக் கொண்டு வருவான்.

அப்போது ஒரு மனிதர் கதவை அசைப்பதைப் பார்த்தேன். நான், இது யார்? என்று கேட்டேன். அவர்கள், உமர் பின் கத்தாப் என்று கூறினார்கள். சற்று காத்திருங்கள் என்று நான் கூறினேன். பிறகு, நான் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் சென்று, அன்னாருக்கு ஸலாம் கூறினேன். பிறகு, உமர் பின் கத்தாப் வந்திருக்கின்றார்கள். அன்னார் அனுமதி கேட்கின்றார்கள் என்று நான் கூறினேன். அதற்கு, அவருக்கு அனுமதி வழங்குங்கள். அவருக்கு சுவர்க்கத்திற்கான நற்செய்தியையும் கூறுங்கள் என்று ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நான் சென்று, உள்ளே வாருங்கள்; ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தங்களுக்கு சுவர்க்கத்திற்கான நற்செய்தி வழங்குகிறார்கள் என்று கூறினேன்.

அன்னார் (ரலி) உள்ளே சென்று ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இடதுபக்கத்தில் கிணற்றுச் சுவரில் அமர்ந்து கொண்டார்கள். பிறகு, தமது கால்களைக் கிணற்றில் தொங்க விட்டுக் கொண்டார்கள். பிறகு, நான் திரும்பி வந்து அமர்ந்து கொண்டேன். அல்லாஹ் இன்னொரு நன்மையை நாடினால் அவரைக் கொண்டு வருவான் என்று கூறினேன்.

மீண்டும் தமது சகோதரரைப் பற்றி எண்ணினார்கள்.

அதற்குள் ஒரு மனிதர் வந்து கதவை அசைக்க ஆரம்பித்தார். இது யார்? என்று நான் கேட்டேன். உஸ்மான் பின் அஃப்ஃபான் என்று அன்னார் கூறினார்கள். சற்று காத்திருங்கள் என்று நான் கூறினேன். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குத் தகவல் தெரிவித்தேன். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அவருக்கு அனுமதி வழங்குங்கள். அவருக்கு சுவர்க்கத்திற்கான நற்செய்தியையும் கூறுங்கள்.

அத்துடன் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைப் பற்றி இதையும் கூறினார்கள்: அவரை வந்தடையும் ஒரு பெரும் துயரம் இருப்பினும் அவருக்கு சுவர்க்கம் உண்டு என்ற நற்செய்தியைக் கூறுங்கள்.

நான் அவரிடம் சென்று, உள்ளே வாருங்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒரு பெரும் துயரம் தங்களுக்கு ஏற்பட்ட பிறகும் தங்களுக்கு சுவர்க்கம் கிடைக்கும் என்று நற்செய்தி வழங்குகிறார்கள் என்று கூறினேன்.

அவர்கள் உள்ளே வந்தார்கள். கிணற்றுச் சுவரின் ஓர் ஓரம் நிரம்பி விட்டதைக் கண்டார்கள். எனவே, அன்னார் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு முன்னால் மறுபுறம் அமர்ந்து கொண்டார்கள்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உஹது மலை மீது ஏறினார்கள். அன்னாருடன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) ஆகியோரும் இருந்தார்கள். அது அசைய ஆரம்பித்தது. அன்னார் (ஸல்) கூறினார்கள்: உஹது மலையே! அசையாது இருப்பாயாக!. அதன் மீது தமது பாதத்தையும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அடித்தார்கள் என்று நான் நினைக்கின்றேன்.

கூறினார்கள்: உன் மீது ஒரு நபியும், ஒரு ஸித்தீக்கும், இரண்டு ஷஹீதுகளும் மட்டுமே உள்ளனர்.

ஸஹீஹ் புகாரி, பாப் மனாகிப், உஸ்மான் பின் அஃப்பான்(ரலி), ஹதீஸ் 3699)

ஹஸ்ரத் ஸயீது பின் ஸைத் அறிவிக்கின்றார்கள்:

நான் ஒன்பது பேர் தொடர்பாக, அவர்கள் சுவர்க்கவாசிகள் என்று சாட்சி பகர்கிறேன். நான் பத்தாவது நபரைப் பற்றியும் இதையே கூறினால், பாவி ஆக மாட்டேன்.

அவர்கள் எப்படி? என்று கேட்டார்கள். அன்னார் கூறினார்கள்: நாங்கள் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் ஹிரா மலை மீது நின்றிருந்தோம். அது அசைய ஆரம்பித்தது. (முதல் அறிவிப்பு புகாரி உடையது. இது திர்மிதி உடையது. இதில் ஹிரா என்று வந்துள்ளது.) அப்போது, ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ஹிராவே! அசையாதிருப்பாயாக! நிச்சயமாக உன் மீது ஒரு நபி அல்லது ஸித்தீக் அல்லது ஷஹீது இருக்கிறார்கள். அந்தப் பத்து சுவர்க்கவாசிகள் யார்? என்று ஒருவர் கேட்டார். அதற்கு, அபூபக்ர், உமர், உஸ்மான், அலீ, தல்ஹா, ஸுபைர், சஃது மற்றும் அப்துர் ரஹ்மான் பின் அஃப் (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) ஆகியோர் ஆவார்கள் என்று ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(சுனன் திர்மிதி, அப்வாபுல் மனாகிப், பாப் மனாகிப் ஸயீத் பின் ஸைது.........ஹதீஸ் எண்:3757)

இங்கு இதுவும் தெளிவாகட்டும். இந்த அறிவிப்பில் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்த சஹாபிகளின் வாழ்நாளிலேயே சுவர்க்கத்திற்கான நற்செய்தி வழங்கியிருந்த அந்த மாபெரும் அந்தஸ்தைக் கொண்ட 10 சஹாபிகள் பற்றி கூறப்படுகிறது. அவர்கள் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு நெருக்கமானவர்களாகவும் இருந்தார்கள். ஆலோசனை வழங்கக்கூடியவர்களாகவும் இருந்தார்கள். வாழ்க்கை வரலாற்றின் உவமையில் அவர்களை அஷ்ர முபஷ்ஷிரா என்று கூறுவார்கள். அதாவது, சுவர்க்கத்திற்கான நற்செய்தி வழங்கப்பட்டிருந்த 10 நபர்கள்.

ஆனால், இது நினைவிருக்கட்டும்! ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வெறும் 10 நபர்கள் தொடர்பாக மட்டுமே சுவர்க்கத்திற்கான நற்செய்தி வழங்கியிருக்கவில்லை. அதற்கும் மேற்பட்டு, அதுபோகவும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சுவர்க்கத்திற்கான நற்செய்தி வழங்கிய எண்ணற்ற சஹாபா மற்றும் சஹாபியாக்கள் இருக்கின்றனர். ஆக, இந்தப் பத்து நபர்கள் மட்டுமின்றி ஏறத்தாழ 50 ஸஹாபிகள் மற்றும் சஹாபியாக்களின் பெயர்களைப் பற்றிய குறிப்பும் கிடைக்கின்றது. அது மட்டுமன்றி, பத்ர் போரில் கலந்து கொண்டிருந்த 313 நபர்கள், உஹது போரில் கலந்து கொண்டவர்கள் மற்றும் பைத்துர் ரிஸ்வான் ஹுதைபிய்யா உடன்படிக்கையின் போது கலந்து கொண்டவர்கள் ஆகியோரைக் குறித்தும் சுவர்க்கத்திற்கான நற்செய்தி வழங்கப்பட்டது.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள், இன்று உங்களில் நோன்பாளி யார்? என்று கேட்டார்கள். நான் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பணிவுடன் கூறினார்கள். இன்று உங்களில் ஜனாஸாவுடன் சென்றவர் யார்? என்று ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு நான் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பணிவுடன் கூறினார்கள்.

(கன்ஸுல் உம்மால், தொகுதி 6, பாகம் 11, பக்கம்-554..........அறிவிப்பு எண்:32551, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்-2004)

இன்று உங்களில் ஓர் ஏழைக்கு உணவளித்தவர் யார்? என்று ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு நான் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பணிவுடன் கூறினார்கள்.

இன்று உங்களில் நோயாளியை நலம் விசாரித்தது யார்? என்று ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு நான் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பணிவுடன் கூறினார்கள்.

அப்போது, எந்த நபரிடம் இந்த விஷயங்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்துவிட்டனவோ அவர் சுவர்க்கத்தில் நுழைந்து விட்டார் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இது ஸஹீஹ் முஸ்லிம் உடைய ஆதாரமாகும்.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஜிப்ரீல் என்னிடம் வந்தார்கள். என்னுடைய கையை அவர்கள் பிடித்தார்கள். மேலும், என்னுடைய சமுதாயம் நுழையக்கூடிய சுவர்க்கத்தின் அந்த

வாசலைக் காட்டினார்கள்.

அப்போது, நானும் தங்களுடன் இருந்திருந்தால் அதைப் பார்த்திருப்பேன் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பணிவுடன் கூறினார்கள். அதற்கு, அபூபக்ரே! நீர் எனது உம்மத்தில் எல்லாருக்கும் முதலாவதாக சொர்க்கத்தில் நுழைவீர் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இந்தக் கருத்)தை மேற்கொண்டு விளக்கியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒருமுறை சபையில் அமர்ந்திருந்தார்கள். அன்னாரைச் சுற்றி சஹாபா பெருமக்கள் அமர்ந்திருந்தார்கள். பிறகு, அல்லாஹ் நிர்ணயித்திருந்த அருட்கொடைகளைப் பற்றி கூறினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இதைக் கேட்டதும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! சுவர்க்கத்தில் நானும், தங்களுடன் இருக்க வேண்டும் என்று துஆ செய்யுங்கள் எனக் கேட்டுக் கொண்டார்கள்.

சில அறிவிப்புகளில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் பெயரும் வருகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீர் என்னுடன் இருப்பீர் என்று நம்புகிறேன். அவ்வாறே, நடக்க வேண்டும் என்றும் நான் அல்லாஹ்விடம் துஆவும் செய்கின்றேன்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதும், இயற்கையாகவே மற்ற சஹாபிகளுடைய உள்ளத்திலும், நமக்காகவும் இதே து ஆ செய்யப்பட வேண்டும் என்றும், நாமும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் கேட்டுக் கொள்ளலாம் என்றும் எண்ணம் தோன்றியது. சுவர்க்கத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் இருப்பதற்கான நற்பாக்கியம் நமக்கு எங்கே கிடைக்கப் போகிறது? என்ற எண்ணத்தில் முதலில் ஸஹாபிகள் இருந்தனர். ஆனால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களோ அல்லது சில அறிவிப்புகளின்படி, வேறு ஒரு ஸஹாபியோ இந்த விஷயத்தைக் கூறி, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் துஆ செய்துவிட்ட பிறகு, அப்போது அவர்களுக்கு ஒரு முன்மாதிரி கிடைத்துவிட்டது. இந்த அமல் அசாத்தியமானது அல்ல; மாறாக, சாத்தியமானது என்பது அவர்களுக்கு தெரிந்துவிட்டது.

ஆக, மற்றொரு ஸஹாபி எழுந்தார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அல்லாஹ் சுவர்க்கத்தில் என்னைத் தங்களுடன் வைக்க வேண்டும் என்று எனக்காகவும் துஆ செய்யுங்கள் என்று கேட்டார்.

அதற்கு, அல்லாஹ் உம் மீதும் அருள் புரிவானாக! ஆனால், எவர் முதலில் கூறினாரோ அவரோ இப்போது துஆவைப் பெற்றுக் கொண்டார் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(குத்பாதே மஹ்மூத், தொகுதி 19, பக்கம் 427-428)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எடுத்துரைக்கின்றார்கள்:

ஒருமுறை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்.

எவர் இன்ன இறைவணக்கத்தில் அதிகம் பங்கு கொள்வாரோ அவர் சுவர்க்கத்தில் இன்ன கதவு வழியாக அழைத்துச் செல்லப்படுவார். எவர் இன்ன இறைவணக்கத்தில் அதிகம் பங்கு பெறுவாரோ அவர் இன்ன கதவு வழியாக அழைத்துச் செல்லப்படுவார்.

இவ்வாறு அன்னார் (ஸல்) பல்வேறு இறை வணக்கங்களின் பெயரை குறிப்பிட்டு இவ்வாறு கூறினார்கள். பல்வேறு நற்செயல்களில் அழுத்தம் கொடுக்கக்கூடியவர்கள் சுவர்க்கத்தின் ஏழு கதவுகள் வழியாக அழைத்துச் செல்லப்படுவார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும், அந்த சபையில் அமர்ந்திருந்தார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அந்த மக்கள் ஒவ்வோர் இபாதத்தில் அழுத்தம் கொடுத்ததனால் சுவர்க்கத்தின் பல்வேறு கதவுகள் வழியாக அழைத்துச் செல்லப்படுவார்கள். ஆனால், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! ஒருவர் எல்லா இறை வணக்கங்கள் மீதும் அழுத்தம் கொடுத்தால், அவருடன் எவ்வாறு நடந்து கொள்ளப்படும் என்று பணிவுடன் அவர் கேட்டார்.

அதற்கு, அவர் சுவர்க்கத்தின் ஏழு கதவுகள் வழியாகவும் அழைத்துச் செல்லப்படுவார். அபூபக்ரே! நீரும் அவர்களைச் சேர்ந்தவராக இருப்பீர் என்று நான் நம்புகிறேன் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(குத்பாதே மஹ்மூத், தொகுதி 18, பக்கம்-624)

இந்த நற்குறிப்பு எதிர்வரும் நாட்களில் தொடரும். இன்ஷாஅல்லாஹ். இப்போது, நான் சில மர்ஹூம்களைப் பற்றி கூற விரும்புகிறேன். பிறகு, அவர்களின் ஜனாஸாத் தொழுகையையும் தொழ வைப்போன்.

முதல் நற்குறிப்பு, இந்தோனேஷியாவின் அமீராக இருந்த மதிப்பிற்குரிய அப்துல் பாஸித் சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் அக்டோபர் 8ஆம் தேதி தமது 71 ஆவது வயதில் மரணமடைந்துவிட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

அன்னார், மவ்லவி அப்துல் வாஹித் சமாட்டரீ சாஹிப் அவர்களின் மகனாவார்கள். F.A வரை கல்வி பயின்ற பிறகு, செப்டம்பர் 20, 1972-ல் 21 வது வயதில் ஜாமிஆ அஹ்மதிய்யா ரப்வாவில் ஷாஹித் தேர்வில் தேர்ச்சி பெற்றார்கள். 1981-ல் முபல்லிக்காக சொந்த நாடான இந்தோனேஷியாவிற்கு திரும்பிச் சென்றார்கள்.

தாய்லாந்தில் தப்லீக் பணியைக் கருத்திற் கொண்டு இந்தோனேஷிய முபல்லிக் ஒருவர் மலேஷியாவின் கோலாலம்பூர் உடைய குடியுரிமையைப் பெற்று, தாய்லாந்துக்குத் தப்லீக்குக்காக அனுப்பப்பட வேண்டும் என்று, 1987-ல் இந்தோனேஷியா உடைய செயற்குழுவின் ஆலோசனையில் தீர்மானிக்கப்பட்டது. அப்போது அன்னாரின் பெயர் பரிந்துரைக்கப்பட்டது. அதற்கு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் ஒப்புதல் நல்கினார்கள். மேலும், அன்னார் தாய்லாந்திற்கு சென்று விட்டார்கள். பிற்காலத்தில் அன்னார் மீண்டும் இந்தோனேஷியாவில் பணியமர்த்தப்பட்டார்கள். இறுதி மூச்சு வரை அன்னார் இந்தோனேஷியாவிலேயே இருந்தார்கள்.

ஒரு நீண்ட காலம் அமீராகப் பணியாற்றுவதற்கு நல்வாய்ப்பு பெற்றார்கள். மர்ஹூமின் தொண்டு காலம் 40 ஆண்டுகள் ஆகும். மர்ஹூம் பின்விட்டுச் சென்றவர்களில், அன்னாரின் துணைவியார் மட்டுமின்றி, மூன்று மகன்களும், இரண்டு மகள்களும் இருக்கின்றார்கள். இவர்களின் துணைவியார் மூஸ்லீ வாதி சாஹிபா கூறுகின்றார்:

மர்ஹூம் அவர்கள் மிக அதிகமாக இயக்கத்தின் மீது வேதனை கொண்டிருந்தார்கள். எப்போதும் எல்லா விஷயத்தைக் காட்டிலும் ஜமாஅத்திற்கு முன்னுரிமை அளித்து வந்தார்கள். மனைவி என்கிற முறையில் அன்னார் ஜமாஅத் மீது கொண்டிருந்த ஆர்வம் மற்றும் தொண்டு ஆகியவற்றைக் குறித்து நான் பறை சாற்றுகின்றேன்.

மர்ஹூமின் சகோதரர் மகன் ஒருவர் தாஹிர் சாஹிப் ஆவார்.அவர் கூறுகின்றார்:

மர்ஹூம் தலைமையகத்திலிருந்து வரும் வழிகாட்டல்களுக்கு முழுமையாகக் கட்டுப்படுவார்கள். மர்ஹூம் ஒருமுறை கூறினார்கள்: குடும்பத்தைச் சந்திப்பதற்காக மலேஷியா செல்வதாக இருந்தது. அதற்காக விமானப் பயணச்சீட்டையும் வாங்கி இருந்தார்கள். ஆனால், கிட்டத்தட்ட ஒரு வாரத்திற்குப் பிறகு நான் மீண்டும் சந்தித்தபோது, நீங்கள் ஏன் மலேசியாவுக்கு செல்லவில்லை? என்று கேட்டேன். அதற்கு, தலைமையகத்திலிருந்து கிடைத்த கடிதத்தில் செல்வதற்கு அனுமதி கிடைக்கவில்லை. எனவே, நான் மலேசியா செல்வதற்கான எண்ணத்தை கைவிட்டு விட்டேன் என்று அன்னார் பதில் அளித்தார்கள். டிக்கெட்டைப் பற்றியும் எந்தக் கவலையும் கொள்ளவில்லை.

அன்னாருடன் பணிபுரிந்த ஒரு பொறுப்பாளர் கூறுகிறார்: மிகவும் அன்போடும், நேசத்தோடும் எங்களுக்குக் கற்றுக் கொடுப்பார்கள்.புரிய வைப்பார்கள்.ஜமாஅத்தின் அமீராக இருந்தபோதும் கூட, ஜமாஅத்திடம் வசதிகளைக் கேட்க மாட்டார்கள். ஜமாஅத் தரப்பிலிருந்து என்ன கிடைத்தாலும் மகிழ்ச்சியுடன் பயன்படுத்திக் கொள்வார்கள். எளிமையைக் கடைபிடிப்பார்கள். அலுவலக நேரங்களில் பலமுறை தாமே வந்து எங்களுடன் அமர்ந்து கொண்டு, கடிதங்களைப் பார்வையிட்டு குறிப்பு எழுத வைப்பார்கள்.

முபல்லிக் மார்களுக்கு மிகவும் கண்ணியம் அளித்து வந்தார்கள். மிகவும் ஆழமான மற்றும் விசாலமான ஞானம்

கொண்டிருந்தார்கள். எப்பொழுது ஒரு தீர்மானம் எடுத்தாலும், எப்போதுமே செயற்குழு உறுப்பினர்களிடம் ஆலோசனை கேட்டுக் கொள்வார்கள். மிகவும் கௌரவமான மனிதராகவும் அதே வேளையில் பணிவு குணம் நிரம்பிய மனிதராக இருந்தார்கள். மிகவும் நெருங்கிப் பழகுபவராக, சிறியவர், பெரியவர் என ஒவ்வொருவருடனும் நல்ல முறையில் நடந்து கொள்பவராக இருந்தார்கள்.

கிலாஃபத்துடன் அளப் பெரும் நேசம் இருந்தது. காலத்தின் கலீஃபா அவர்களின் கட்டளை வரும்போது தமது கருத்துகள் அனைத்தையும் விட்டுவிட்டு செயல்பட வேண்டும் என்று எங்களுக்கு வலியுறுத்திக் கூறி வந்தார்கள். ஜமாஅத் அமைப்புக்கு முன்னுரிமை அளித்து வந்தார்கள். ஜமாஅத் உடைய செல்வங்கள் மீது ஆழிய பார்வை கொண்டவராகவும் அவற்றை முழுமையாகப் பாதுகாப்பவராகவும் இருந்தார்கள். எவர் மாறுபட்டு நடந்தாலும் கடுமையாக நடந்து கொள்வார்கள்.

பெரும்பாலும் மற்ற ஊழியர்கள் வருவதற்கு முன்னதாக அலுவலகத்திற்கு வந்து விடுவார்கள். ஏதாவது ஒரு காரணத்தால் அலுவலகத்திற்கு வர முடியவில்லை என்றாலோ அல்லது தாமதமாக வந்தாலோ பணியாளர்களுக்குக் கண்டிப்பாகத் தகவல் கொடுப்பார்கள்.

மர்ஹூம் அவர்கள் அறிக்கைகள் அல்லது கடிதங்களைப் பார்க்கும்போது மிகவும் எச்சரிக்கையாக இருப்பார்கள். முழுமையாக ஒவ்வொரு விஷயத்தையும் பார்த்து வந்தார்கள். உடனடியாக செய்து முடிக்க வேண்டிய வேலை என்றால், இரவு நேரம் வரை பணியில் மூழ்கியிருப்பார்கள்.

அஹ்மதிகளை சந்திக்க செல்லும்போது அஹ்மதிகள் கூறுகிறார்கள்: எங்களது பிள்ளைகளுக்காக எப்போதும் அன்பளிப்பை உடன் எடுத்து வருவார்கள். எப்போதும் அன்பு நேசத்துடன் நடந்து கொள்வார்கள். எப்போதும் மற்றவர்களை மகிழ்விப்பதற்கு முயற்சி செய்யும் ஒரு வழிகாட்டியாக இருந்தார்கள்.

அமீர் சாஹிப் அவர்கள் எங்களுக்கும் இந்தோனேஷியா அஹ்மதிகளுக்கும் ஆன்மீக தந்தையாக இருந்தார்கள். ஜமாஅத் அமைப்பிற்கும், ஜமாஅத் மரபுகளுக்கும் எப்போதும் முன்னுரிமை அளித்து வந்தார்கள்.

இந்த சிறப்பம்சங்களே ஓர் அமீரிடம் இருக்க வேண்டும். கோபப்படும்போது கூட ஒவ்வொருவரின் மரியாதையையும் கருத்தில் கொள்வார்கள். கோபத்தில் விரும்பியதை கூறிவிட மாட்டார்கள். தண்டனை அளிக்கும்போது சீர்திருத்த அம்சத்தை எப்போதும் கருத்திற் கொண்டிருப்பார்கள். எந்தப் பகைமையும் இருக்காது. காழ்ப்புணர்ச்சி இருக்காது. மாறாக, சீர்திருத்தம் நோக்கமாக இருக்கும்.

பிறகு கூறுகிறார்கள்: இங்கு பல அஹ்மதிகள் தமது ஜமாஅத் சொந்த வேலைகளில் மர்ஹூமிடம் வழிகாட்டல் பெற்று வந்தார்கள். அன்னார் அசாதாரணமான அன்பு மற்றும் நேசத்துடன் இந்தோனேஷியா ஜமாஅத் மக்கள் மீது அக்கறை கொண்டிருந்தார்கள். ஒரு வருடமாக நோயுற்றிருந்தார்கள். கடந்த ஆண்டு முதல், தாம் நோய்வாய்ப்பட்டிருந்த நாட்களிலும் வழக்கப்படி பல்வேறு கூட்டங்கள், சந்திப்புகள் மற்றும் சுற்றுப் பயணங்களில் ஜமாஅத் தொண்டுகள் ஆற்றி வந்தார்கள். அதில் குறை ஏற்படவிடவில்லை.

இங்கு இந்தோனேஷியா துறையில் லண்டனிலேயே இருக்கும் மஹ்மூத் வர்தீ சாஹிப் கூறுகின்றார்:

மர்ஹூமின் இயல்பில் சில அம்சங்கள் மிகவும் வெளிப்படையாகத் தெரிந்தன. அவற்றில், எல்லாவற்றை விடவும் வெளிப்படையாக தெரிந்தது அவர்களின் அறிவுத் திறன் ஆகும். ஞானத்தை நண்பனாக்கிக் கொண்ட மனிதராக இருந்தார்கள். ஒவ்வொரு கணமும் அறிவை வளர்த்துக் கொள்வதற்கான ஆர்வம் இருந்தது. பல்வேறு தலைப்புகள் குறித்து விசாலமான ஞானம் கொண்டிருந்தார்கள். எந்தத் தலைப்பில் உரையாடல் நடைபெற்றாலும் அவர்கள் அதில் போதுமான அளவு விவாதிக்கும் திறமை பெற்றிருந்தார்கள்

ஜமாஅத் நூல்கள் சார்ந்த அறிவு மட்டுமின்றி, மற்ற பொது அறிவிலும் இவர்கள் கைதேர்ந்திருந்தார்கள். பத்திரிகைகளை முறையாக வாசித்து வந்தார்கள். தேசிய மற்றும் சர்வதேச அளவிலான எல்லா செய்திகளையும் படித்து வந்தார்கள். அது இந்தோனேஷியா மொழியில் இருந்தாலும் சரி! ஆங்கிலத்தில் இருந்தாலும் சரி!

சொற்பொழிவு ஆற்றும் போது மிகவும் நீளமான சொற்பொழிவு ஆற்ற மாட்டார்கள். எப்போதும் சுருக்கமாகவும், கருத்து செறிவுள்ளதாகவும் உரை நிகழ்த்துவார்கள். உரையில் மக்களுக்குத் தமது கருத்தை எப்போதும் எளிய சொற்களில் புரிய வைத்து விடுவார்கள். எல்லா மட்டத்தில் இருப்பவர்களாலும் இவர்கள் கூறிய எளிமையாகப் புரிந்து கொள்ள முடிந்தது. பிறகு கூறுகிறார்:

அன்றாட ஆடைகள் மிகவும் எளிமையாக இருந்தன. ஆனால், கௌரவமான மனிதராக இருந்தார்கள். எந்த விதமான பகட்டும் சிறிதும் இருக்கவில்லை. எல்லா மட்டத்தில் இருப்பவர்களும் இவர்களுடன் அமர்ந்து சகஜமாக உரையாடி வந்தார்கள். ஆனால், எப்போதும் அனைவரும் இவர்களுக்கு கண்ணியமும், மரியாதையும் அளித்து படித்தரத்தைக் கருத்திற் கொண்டவாறு இவர்களுடன் உரையாடி வந்தார்கள்.

ஃபஸ்லே உமர் ஃபாரூக் சாஹிப் அவர்கள் இயக்கத்தின் முரப்பி ஆவார்கள். அங்கு ஜாமிஆ அஹ்மதிய்யாவில் ஆசிரியராகவும் உள்ளார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: சிறு பருவத்தில் இருந்து அமீர் சாஹிபுக்கு அருகில் இருந்தேன். இந்தோனேஷியா ஜமாஅத் மிகவும் கஷ்டமான காலகட்டத்தில் இருந்தபோது, அன்னார் கடின உழைப்பு, பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையுடன் ஜமாஅத் மக்கள் அனைவருக்கும் ஊக்கமளித்து வந்தார்கள். அவர்களுக்குப் பொறுமை மற்றும் துஆவிற்காக வலியுறுத்தி வந்தார்கள். துஆ செய்யும்போதெல்லாம் உருக்கமாகவும், அழுது மன்றாடியும் துஆ செய்வார்கள். எப்போதும் நேரத்திற்குத் தொழுகைக்காகப் பள்ளிவாசலுக்கு வருவார்கள்.

வாழ்வை அர்ப்பணித்தவர்களை நன்றாகப் பார்த்துக் கொண்டார்கள். எப்போது ஒரு முரப்பி செயல் களத்துக்கு செல்ல ஆரம்பித்தாலும் அன்னார் தம் தரப்பிலிருந்து அவருக்கு ஏதாவது ஓர் அன்பளிப்பைக் கண்டிப்பாக வழங்குவார்கள்.

ஸைஃபுல்லாஹ் முபாரக் சாஹிப். இவர்களும் ஜாமிஆவின் ஆசிரியர் ஆவார்கள். அன்னார் கூறுகிறார்கள்: மவ்லானா அப்துல் பாஸித் சாஹிப் அவர்கள் வாழ்வை அர்ப்பணித்தவர்களுக்கு ஓர் உயரிய முன்மாதிரியாக இருந்தார்கள். ஜமாஅத்தின் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் எப்போதும் கலந்து கொள்வார்கள்.

ஒவ்வொருவருடனும் மென்மையாகவும், கண்ணியத்துடனும் பேசுவார்கள். எந்த சபையில் சென்றாலும் அன்னாரது வருகையால் பொலிவு வந்துவிடும். புன்சிரிப்புடனே இருப்பார்கள்.

கூறுகிறார்கள்: இந்தோனேஷியா ஜாமிஆவில் படித்துக் கொண்டிருந்தபோது, மஃக்ரிபுக்குப் பிறகு எங்களுடன் அமர்வார்கள். நலம் விசாரிப்பார்கள். சிறிதளவு உரையாடல் நிகழும்.

பிறகு இயக்கத்தின் முரப்பி நூருத்தீன் சாஹிப் அவர்கள் உள்ளார்கள். அவர்களும் இதை எழுதியுள்ளார்கள்: தமது முன்மாதிரியை முன்வைக்கும் அமீராக இருந்தார்கள். 2018இல் இவர்கள் எங்களது பள்ளிவாசலுக்கு அடிக்கல் நாட்டினார்கள். அப்போது எங்களிடம் 6 கோடி ரூபாய்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

இருந்தது. இந்தோனேஷியா ரூபாயின் பண மதிப்பீடு மிகவும் குறைவானது. எனவே, அங்கு கோடிகளிலும், பில்லியன்களிலும் தான் பேச்சு நடைபெறும். இந்த வகையில் அவர்கள் கூறுகிறார்கள்:

6 கோடி ரூபாய் இருந்தது. ஆனால், பள்ளிவாசலுக்கு ஏறத்தாழ 150 கோடி ரூபாய் தேவைப்பட்டது. இவர்கள் அறிவுரை கூறிய வண்ணம் கூறினார்கள்: பள்ளிவாசல் கட்டுவதற்கு எவ்வளவு பட்ஜெட் இருக்கிறதோ அதை வைத்தே கட்டுமான பணியை துவங்குவோம். ஆனால், இதற்குப் பிறகு, நாம் அல்லாஹ்வின் உதவியின் காட்சிகளைக் காண்போம். இந்தோனேஷியா பணம் 150 கோடி தேவையே என்று அஞ்ச வேண்டியது இல்லை. உங்களிடம் 6 கோடி உள்ளது. ஆரம்பித்துவிடுங்கள் என்றார்கள்.

பத்தில் ஒரு பங்கு கூட இருக்கவில்லை. 3 சதவிகிதம் அல்லது 4 சதவிகிதம் தான் இருந்தது. அவர்கள் கூறுகிறார்கள்: ஆக, இவ்வாறு அறிவுரை கூறிய பிறகு, இவர்கள் தமது சட்டைப்பையில் இருந்து பர்ஸை வெளியே எடுத்து எங்களுக்குப் பள்ளிவாசலுக்காக சிறிது தொகையைக் கொடுத்தார்கள்.

இங்கிருந்தே ஜமாஅத் மக்களும் ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு தமது சிறந்த தியாகத்தை முன்வைக்க ஆரம்பித்துவிட்டார்கள். எதுவரை என்றால், இரண்டு ஆண்டுகளுக்குள் பள்ளிவாசலின் கட்டுமானப் பணி 80 சதவிகிதம் முழுமை அடைந்துவிட்டது. பிறகு, இந்த உலகளாவிய தொற்று நோய் பரவல் கால கட்டம் வந்துவிட்டது. மக்களின் வருமானம் குறைந்துவிட்டது. பிறகு, பள்ளிவாசலின் கட்டுமானப் பணி நின்றுவிட்டது.

அவர்கள் கூறுகிறார்கள்:

பிறகு, நாங்கள் அன்னாரிடம் சென்று பள்ளிவாசலின் கட்டுமானப் பணியை முழுமை செய்ய விரும்புகிறோம்; ஆனால், ஏறக்குறைய 15 கோடி ரூபாய் தேவைப்படுகிறது என்று கூறினோம். (அதாவது, 150 மில்லியன்) தலைமையகம் எங்களுக்கு உதவும் என்று எங்களுக்கு நம்பிக்கை இருந்தது. ஆனால், அமீர் சாஹிப் அவர்கள் தலைமையகம் உதவி செய்யாது. நீங்கள் யாரிடமும் கேட்காமல் உங்களாலேயே இந்தத் தொகையை முழுமைபடுத்த முடியும் என்று கூறினார்கள். பிறகு, அமீர் சாஹிப் அவர்கள், எத்தனை அஹ்மதிகள் இருக்கின்றார்கள்? என்று கேட்டார்கள். நான் 160 அஹ்மதிகள் என்று கூறினேன்.

இதைக் கேட்டதும் இவர்கள் நிதானமாக புன்சிரித்தவாறு கூறினார்கள்: ஒவ்வொருவரிடமும் கூறுங்கள். 10 மில்லியன் கொடுத்தால் (அது கிட்டத்தட்ட 100, 150 பவுண்ட ஆகிறது. அதைக் கொடுத்தால்) இந்தத் தொகை முழுமை பெறும்.

அவர்கள் கூறுகிறார்கள்: இந்தப் பணி இவ்வளவு எளிதாக நிகழ முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கவில்லை. ஆனால், நாங்கள் இந்த அறிவுரையின்படி செயல்பட ஆரம்பித்ததும், ஜமாஅத் மக்களின் உள்ளத்தில் அவர்கள் தங்களது சிறந்த செல்வத்தைப் பள்ளிவாசலின் கட்டுமானப் பணிக்காக முன் வைக்குமாறு ஓர் அன்பையும், உணர்வையும் ஏற்படுத்தி விட்டோம். இதுபோக, மர்ஹூம் அவர்களும் சுயமே தம் தரப்பிலிருந்து போதுமான அளவு தொகையை முன் வைத்தார்கள். ஆக, மூன்று ஆண்டுகளுக்குள் பிப்ரவரி மாதம் பள்ளிவாசல் முழுமை பெற்றுவிட்டது.

பிறகு நம்மவர்கள் மட்டுமின்றி, மற்றவர்களுடனும் மர்ஹூமின் தொடர்புகள் நல்ல முறையில் இருந்தன. மத விவகாரங்களின் முன்னாள் அமைச்சர் லுக்மான் ஹக்கீம் ஸைஃபுத்தீன் சாஹிப் (அவர்கள் அஹ்மதி அல்ல). அவர்கள் கூறுகிறார்கள்: நான் மர்ஹூம் அவர்களை தேசிய அளவிலான ஒரு பிரமுகராகக் கருதுகிறேன். அவர்கள் எப்போதும் மனிதத்துவத்தை முன்னிறுத்தி வந்தாரகள். அவர்கள் எங்கு சென்றாலும், எவ்வாறு நாம் மனித குலத்திற்குத் தொண்டாற்றலாம்? எவ்வாறு பரஸ்பரம் சகிப்புத் தன்மையை மேற்கொள்ளலாம்? எவ்வாறு எல்லாரையும் கருத்திற் கொள்ளலாம்? என்ற விஷயத்திற்கே அதிக அழுத்தம் கொடுத்து வந்தார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: என்னுடைய பார்வையில் இந்த விஷயங்கள் அனைத்தும் நம் அனைவரின் பொறுப்பாகும். அதாவது, அஹ்மதிகளின் பொறுப்பு மட்டும் அல்ல. மாறாக, இந்தோனேஷியர்கள் அனைவரின் பொறுப்பாகும். அதாவது, நாம் அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்க வேண்டும். அவர்கள் நமக்கு செய்த அறிவுரைகளின்படி செயல்படுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். நமக்கிடையில் எத்தனை கருத்து வேறுபாடுகள் மற்றும் வேற்றுமைகள் இருக்கின்றனவோ அவை அனைத்தும் பரஸ்பரம் வெறுப்பைப் பரப்புவதற்கும், மனிதத்தையும், கண்ணியத்தையும் வீழ்த்துவதற்குக் காரணமாகவும் அமையும். அவற்றை அகற்ற வேண்டும்.

இந்தோனேஷியாவில் துயூனஸ் உடைய ஸஃபீர் ஸஹீர் சாஹிப் அவர்கள் எழுதுகிறார்கள்: நான் அமீர் சாஹிப் அவர்களிடம் இருந்து, நாம் எவ்வாறு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அன்னாரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் அறிஞர் பெருமக்களை நேசிக்க வேண்டும்? எவ்வாறு அவர்களது உயர் போதனைகள் படி செயல்பட வேண்டும்? என்பதைக் கற்றுக் கொண்டேன். அஹ்மதிகள் மீது அநீதி இழைக்கப்பட்டது தான். ஏச்சுப் பேச்சுகளுக்கும் ஆளானார்கள் தான்.

இந்தோனேஷியாவில் அதிகம் அநீதி இழைக்கப்பட்டது. மர்ஹூம் மிகவும் துணிச்சலாக அங்கு அந்தக் காலகட்டத்தைக் கடந்தார்கள். மிகவும் நல்ல முறையில் எல்லா அஹ்மதிகளையும் சீர்தூக்கினார்கள். எவ்வாறு இருப்பினும், ஸஃபீர் சாஹிப் எழுதுகிறார்கள்: அஹ்மதிகள் மீது அநீதி இழைக்கப்பட்டதுதான். ஏச்சுப் பேச்சுகளுக்கு ஆளாக்கப்பட்டார்கள் தான். அநியாயமாக அவர்களிடம் நடந்து கொள்ளப்பட்டது தான். இருந்தும் கூட அமீர் சாஹிப் அவர்கள் எங்களுக்கு எந்நிலையிலும் களங்கமற்றத் தன்மை மற்றும் நன்றியுணர்வுடன் மார்க்கம், நாடு மற்றும் மனித குலத்திற்குத் தொண்டாற்ற வேண்டும் என்று கற்றுக் கொடுத்தார்கள்.

ஏனெனில், முழு உலகிலும் உள்ள அஹ்மதிகளின் கொள்கை Love For All Hatred For None என்பதாகும். அமீர் சாஹிப் அல்லாஹ்வுக்கு மிகவும் பிடித்தமானவராகவும், எளிய இயல்புடையவராகவும், நல்ல ஒழுக்கமான நபராகவும் இருந்தார்கள் என்று நான் சாட்சி பகர்கிறேன்.

பிறகு, தேசிய அளவிலான ஓர் அமைப்பின் தலைவி நியா ஷரீஃபுத்தீன் சாஹிபா அவர்கள் எழுதுகிறார்கள்: அமீர் சாஹிப் அவர்கள் பேசும் தோரணை ஆழமானத் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருந்தது. மென்மையுடனும், பணிவுடனும் உரையாடி வந்தார்கள் தான். எனினும், அதில் நாட்டுப்பற்று உணர்வுகள் தெளிவாகத் தெரிந்து வந்தன. ஆக, அவர்களின் பேச்சுக்களால் Love For All Hatred For None என்பது வெளிப்பட்டு வந்தது. மர்ஹூம் நல்ல மனிதராக இருந்தார்கள். எப்போதும் ஈமானோடும், எல்லாருடனும் அன்பின் உணர்வுகளோடு உரையாடும் தலைவராக இருந்தார்கள் என்றும் நாங்கள் சாட்சி பகர்கின்றோம்.

மிஃராஜுத்தீன் ஷாஹித் சாஹிப் எழுதுகின்றார்கள்: அமீர் என்ற ரீதியில், அன்னாரது தலைமையின் போது, இந்தோனேஷியா அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு மிக அதிகமான எதிர்ப்பை எதிர் கொள்ள வேண்டி வந்தது. இந்தோனேஷியாவில் பல இடங்களில் அஹ்மதிகள் மீது தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. அன்னார் மிகவும் வீரத்துடனும், நிதானமாகவும் அவற்றை எதிர் கொண்டார்கள். அரசு அதிகாரிகளும் அன்னாருக்கு கண்ணியம் அளித்து வந்தார்கள். இது அன்னாரின் நல்ல தொடர்புகளினால் ஏற்பட்டதாகும்.

ஜாமிஆ அஹ்மதிய்யா இந்தோனேஷியாவின் தலைமையாசிரியர் அஸீம் சாஹிப் எழுதுகிறார்கள்:

அமீர் சாஹிப் கிலாஃபத்துக்காக அர்ப்பணமாகக்கூடியவராக இருந்தார்கள். அண்டை வீட்டாராக இருந்ததன் காரணமாகப் பெரும்பாலான நேரங்களில் தொழுகைக்காக என்னுடன் பள்ளிவாசலுக்கு செல்வார்கள். அவர்கள் எப்போது சுற்றுப் பயணம் சென்றாலும், இன்ன இன்ன ஜமாஅத்களுக்குச் சுற்றுப் பயணம் செல்கிறேன் என்று கண்டிப்பாகக் கூறுவார்கள். என்னையும் செல்லுமாறு கூறி வந்தார்கள். ஜாமிஆ அஹ்மதிய்யாவைக் குறிப்பாகக் கருத்திற் கொண்டு வந்தார்கள்.

ஜாமிஆ அஹ்மதிய்யாவின் போர்டு உறுப்பினர் என்ற ரீதியில், மாணவர்களை இன்டர்வியூ எடுக்கும்போது இவ்வாறு

வலியுறுத்திக் கூறுவார்கள்: நீங்கள் அனைவரும் முபல்லிக் ஆகப் போகின்றீர்கள். எனவே, ஜமாஅத்துகளுக்கு எல்லா விதத்திலும் முன்மாதிரியாக திகழ்வதற்கு முயற்சி செய்யுங்கள்.

மேலும் கூறுகிறார்கள்:

எனக்கும் மர்ஹூம் வழிகாட்டல் வழங்கி வந்தார்கள். ஒவ்வொரு மாணவரைப் பற்றியும் அவரிடம் என்ன குறை உள்ளது? என்பதைத் தனிப்பட்ட முறையில் கூறி அதை நிவர்த்தி செய்ய முயற்சி செய்யுங்கள் என்று கூறி வந்தார்கள். ஜாமிஆ மாணவர்கள் மீது அக்கறை கொண்டிருந்தார்கள்.

அமெரிக்காவில் இயக்கத்தின் முரப்பி இர்ஷாத் முல்ஹீ சாஹிப் இருக்கின்றார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்: நானும், பாஸித் சாஹிப் அவர்களும் ஜாமிஆவில் வகுப்புத் தோழர்களாக இருந்தோம். ஒரே அறையிலும் தங்கி வந்தோம். எனக்கு அவர்களை மிகவும் அருகில் இருந்து பார்ப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது. மிகவும் புத்திசாலியான, உன்னதமான நினைவாற்றல் கொண்டிருந்த, நல்லியல்புள்ள, நெருங்கிப் பழகக் கூடிய மற்றும் சிரித்த இயல்புக்கு சொந்தக்காரராக இருந்தார்கள்.

மிகச் சிறந்த பேட்மிண்டன் வீரராக இருந்தார்கள். ரப்வாவில் எப்போதும் வெற்றி பெற்று வந்தார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்:

மர்ஹூம் என்னிடம் கூறினார்கள். அன்னார் இந்தோனேஷியாவிலிருந்து ரப்வா வர இருந்தபோது அந்த நாட்களிலேயே அன்னாருக்கு ஒரு கம்பெனி தரப்பிலிருந்து விளையாட்டு வீரராக ஒரு பெரிய ஆஃபர் கொடுக்கப்பட்டது. அதனால், அன்னாரின் தந்தையார் மதிப்பிற்குரிய மவ்லானா அப்துல் வாஹித் சாஹிப் அவர்களுக்கு, இந்த பெரிய ஆஃபர் மீது பேராசை கொண்டு அப்துல் பாஸித் ஜாமிஆ செல்வதற்கான எண்ணத்தை மாற்றிக் கொள்வாரோ? என்று மிகவும் கவலை ஏற்பட்டது.

மர்ஹூம் தந்தையாரின் இந்த வேதனையைக் கண்டபோது, தந்தையாருக்கு உறுதியளித்தார்கள். மேலும், நான் ஒருபோதும் உலக ஆதாயங்களுக்காக மார்க்கத்தை விட மாட்டேன் என்று உறுதி கூறினார்கள். இவ்வாறு மிகப் பெரிய பண லாபத்தின் ஆஃபரை ஏற்க மறுத்துவிட்டார்கள். இவர்கள் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை அளித்தார்கள். மேலும், அந்த உறுதிமொழியை நிறைவேற்றினார்கள் என்பதற்கு அன்னாரின் முழு வாழ்நாளும் சாட்சியாக உள்ளது.

கிலாஃபத் மீது அதிக நேசம் கொள்ளக்கூடியவராக இருந்தார்கள். மாய்ந்து போகக் கூடியவராகவும், உயிரை அர்ப்பணிக்கக்கூடியவராகவும் இருந்தார்கள். மாணவ பருவத்தில் இருந்தே ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களுக்கு மிகவும் நெருக்கமானவராக இருந்தார்கள்.

கூறுகிறார்கள்: நீங்கள் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு மிகவும் பிடித்தமானவர் என்று கூறி நாங்கள் கிண்டல் செய்து வந்தோம். இவ்வாறே எல்லா கிலாஃபத் காலகட்டத்திலும் அன்னார் மிகவும் களங்கமற்றத் தன்மை மற்றும் நன்றியுணர்வின் முன் மாதிரியைக் காட்டினார்கள்.

அல்லாஹ் மர்ஹூமிற்கு பாவமன்னிப்பு வழங்கி அன்னாருடன் கருணையுடன் நடந்து கொள்வானாக! அன்னாரின் அந்தஸ்தை உயர்த்துவானாக. அல்லாஹ் ஜமாஅத்திற்கு அன்னாரைப் போன்ற முபல்லிக்மார்கள் மற்றும் ஊழியர்களை வழங்கிக் கொண்டே இருப்பானாக. நான் கூறியதுபோன்று, நானும் அன்னாரை முழுமையாகக் கட்டுப்பட்டக்கூடியவராகவும், மிகவும் தன்னலமற்ற மனிதராகவும் கண்டுள்ளேன்.

அல்லாஹ் செல்லக்கூடியவர்களினால் ஏற்படும் குறைகளையும் நிவர்த்தி செய்து கொண்டே இருப்பானாக. குறிப்பாக, இந்தோனேஷியாவின் முரப்பிமார்கள் மற்றும் முபல்லிக்மார்கள் அன்னாரின் முன்மாதிரியை முன்னிறுத்த வேண்டும். இவை பழைய விஷயங்கள் அல்ல. இன்றைய காலத்தில் இம்மக்கள் இருந்தார்கள். அவர்கள் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை அளித்தார்கள். மேலும், வக்ஃபுக்கான உரிமையை செலுத்தினார்கள்.

அடுத்த நற்குறிப்பு, தன்ஸானியாவின் இயக்கத்தின் முரப்பி யூஸுஃப் உஸ்மான் கம்பலா சாஹிப் அவர்களின் துணைவியார் ஸைனப் ரமஸான் சாஹிபா அவர்களுடையது. அன்னார் கடந்த நாட்களில் தமது 70 வது வயதில் மரணமடைந்துவிட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

அன்னாரின் கணவர் யூஸுஃப் கம்பாலா சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்: என்னுடைய துணைவியார் மிகவும் நல்லவராகவும், களங்கமற்றவராகவும் மேலும் ஜமாஅத்தின் ஒவ்வொரு பணியிலும் கலந்து கொள்பவராகவும் இருந்தார்கள். அண்டை வீட்டாருடன் மிகவும் நல்ல தொடர்புகளைக் கொண்டிருந்தார்கள். ஏழைகள் மற்றும் அநாதைகளைப் பராமரித்து வந்தார்கள். முரப்பிமார்களுக்கு மிக அதிகமாகத் தொண்டாற்றியும், கண்ணியம்அளித்தும் வந்தார்கள். சந்தாக்களில் எப்போதும் முன்னால் இருப்பார்கள்.

நாங்கள் இருந்த இடங்களில் எல்லாம் ஜமாஅத் பணிகளில் அன்னார் எப்போதும் முன்னணியில் இருந்து வந்தார்கள். எல்லா அஹ்மதிகளுடனும் மிகவும் கலப்பற்ற முறையில் பழகி வந்தார்கள். இரண்டு, இரண்டரை ஆண்டுகளாகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தார்கள். மிகச் சிறந்த மருத்துவர்களைக் கொண்டு சிகிச்சையும் அளித்து வந்தோம். ஆனால் அல்லாஹ்வின் நியதி மேலோங்கியது. மேலும், அன்னார் கடந்த நாட்களில் மரணமடைந்துவிட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

ஜனாஸாவில் கலந்து கொள்வதற்காக டபூரா மற்றும் பல்வேறு பகுதிகளில் இருந்து சுமார் ஆயிரம் நபர்கள் வந்திருந்தார்கள். அவர்களில் ஜமாஅத் அல்லாத உறவினர்களும் அடங்குவர்.

மர்ஹூமாவிற்கு மூன்று மகன்களும், மூன்று மகள்களும் இருக்கின்றனர். அவர்கள் அனைவருக்கும் தற்போது திருமணம் ஆகிவிட்டது. அல்லாஹ் மர்ஹூமாவிற்குப் பாவமன்னிப்பு வழங்கி அன்னாருடன் கருணையுடன் நடந்து கொள்வானாக.

அடுத்த நற்குறிப்பு, காதியானின் தர்வேஷ் ஷேக் அப்துல் கதீர் சாஹிப் அவர்களின் துணைவியார் ஹலீமா பேகம் சாஹிபா அவர்களுடையதாகும். கடந்த மாதம் அன்னார் மரணமடைந்துவிட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

மர்ஹூமா தொழுகை மற்றும் நோன்பை முறையாக கடைபிடிக்கக் கூடியவராகவும், பொறுமைசாலியாகவும். நன்றி செலுத்தக் கூடியவராகவும், நெருங்கிப் பழகக் கூடியவராகவும், நல்லொழுக்கமுள்ள பெண்மணியாகவும் இருந்தார்கள். பிள்ளைகளையும் தொழுகை மற்றும் திருக்குர்ஆன் ஓதுவதில் முறையானவர்களாக ஆக்குவதற்கு மிகவும் கடினமாக உழைத்து வந்தார்கள்.

உடல்நிலை இடமளித்த வரை காதியானின் பிள்ளைகளுக்குத் திருக்குர்ஆன் கற்றுக் கொடுத்து வந்தார்கள். கிலாஃபத் உடன் மிகவும் அன்பு இருந்தது. காலத்தின் கலீஃபா அவர்கள் தரப்பிலிருந்து அறிவிக்கப்படும் எல்லாத் திட்டங்களுக்கும் செவிசாய்த்து வந்தார்கள். தர்வேஷிய காலத்தை அன்னார் மிகவும் பொறுமையுடனும், நன்றியுடனும் கழித்தார்கள். ஏழ்மையிலும் கூட யாசகம் கேட்ட எவரையும் ஒருபோதும் வெறுங்கையோடு திரும்பிச் செல்ல விட்டதில்லை.

மர்ஹூமாவின் வீடு தாருல் மஸீஹ்க்கு அருகில் இருந்ததன் காரணத்தால், ஆண்டு மாநாட்டின் நாட்களில் விருந்தினர்களால் நிறைந்திருக்கும். விருந்தினர்களை மிகவும் நற்பண்புடன் வரவேற்று அவர்களுக்கு விருந்தோம்பல் செய்து வந்தார்கள். மர்ஹூமா மூஸியாக இருந்தார்கள். அன்னாரின் மகன் ஷேக் நாஸிர் வஹீத் சாஹிப் காதியான் நூர் மருத்துவமனையின் பொறுப்பு நிர்வாகியாகத் தொண்டாற்றுவதற்கான நற்பேறும் பெற்று வருகிறார். மர்ஹூமாவுக்கு மூன்று மகள்கள் உள்ளனர். மூவரும் வெளிநாட்டில் உள்ளனர். மர்ஹூமாவுடன் அல்லாஹ் கருணையுடன் நடந்து அவர்களுக்குப் பாவமன்னிப்பு வழங்குவானாக.

அடுத்த நற்குறிப்பு, கேனீ பாஸ்காவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய மேலே அனீஸா எய்பீ ஸாயீ சாஹிபா அவர்களுடையது ஆகும். அன்னாரின் வாழ்க்கை நிகழ்வுகளும் விநோதமானவை. அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட

சம்பவமும் மிகவும் விநோதமானது. மிகவும் களங்கமற்ற, நன்றியுணர்வுள்ள பெண்மணியாக இருந்தார்கள். அன்னார் கடந்த நாட்களில் மரணமடைந்துவிட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னாருக்கு வயது 73ஆக இருந்தது.

கரீபாஸ் உடைய முரப்பி காஜா ஃபாயிஸ் சாஹிப் கூறுகின்றார்:

மேலே அனீஸா எய்பீ ஸாயீ சாஹிபா கரீபாஸ் ஜமாஅத்தின் முதல் முஸ்லிமும், முதல் அஹ்மதியும் ஆவார்கள். உலகின் இந்த மூலையில் எப்படியோ திருக்குர்ஆனின் ஒரு பிரதி கிடைத்துவிட்டது. அது எப்படிப்பட்ட ஓர் இடம் என்றால், அங்கு மற்ற இடங்களுடன் சேர்த்து நூல்களும் கூட மிகவும் அரிதாகவே தென்பட்டு வந்தன.

மர்ஹூமாவுக்குத் திருக்குர்ஆனின் இந்தப் பிரதி கிடைத்ததும் சுயமே படிக்க ஆரம்பித்து விட்டார்கள். அத்துடன் மொழியாக்கமும் இருந்தது. அதைப் படித்ததும் மதிப்பிற்குரிய மேலே அனீஸா எய்பீ ஸாயீ சாஹிபா அவர்கள் மீது எந்த அளவுக்குத் திருக்குர்ஆனின் தாக்கம் ஏற்பட்டது என்றால், தாமே உள்ளத்தில் நம்பிக்கை கொண்டார்கள். மேலும், அப்போதிருந்தே பர்தா அணிய ஆரம்பித்துவிட்டார்கள்.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முதல் முபல்லிக் மர்ஹூம் ஹாஃபிழ் ஜிப்ரீல் ஸய்யிது சாஹிப் அவர்கள் கரீபாஸுக்கு வந்தபோது, அவர்கள் மக்களிடம் இங்கு இந்த நாட்டில் முஸ்லிம் யாராவது இருக்கின்றீர்களா? என்று கேட்டார்கள். அப்போது எல்லாரும் மதிப்பிற்குரிய மேலே அனீஸா எய்பீ ஸாயீ சாஹிபா அவர்களைக் காட்டினார்கள். அதாவது, இந்த முழு நாட்டிலும் இவர் ஒருவர்தான் முஸ்லிம் என்பதைப் போன்று சுட்டிக் காட்டினார்கள்.

இறைவனின் அருள் எப்படி இருக்கிறது என்று பாருங்கள்! மதிப்பிற்குரிய மேலே அனீஸா எய்பீ ஸாயீ சாஹிபாவின் உள்ளத்தில் இஸ்லாத்தை ஏற்ற போது, ஓராண்டிற்குள்ளேயே ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் வழிகாட்டலின்பேரில், இயக்கத்தின் முபல்லிக் அங்கு சென்றடைந்து விட்டார்கள்.

முபல்லிக் அவர்கள் சென்றடைவதற்கு முன்னாலேயே இந்த வீரமான இளம் பெண் அப்போது, தமது குடும்பம் மற்றும் நண்பர்கள் மத்தியில் இஸ்லாத்தை பரப்பவும் ஆரம்பித்திருந்தார்கள். இந்த காரணத்தினால் ஒரு லட்சம் பேர் கொண்ட அந்த சிறிய நாட்டில் ஒரு பெண் முஸ்லிம் ஆகிவிட்டார் என்பது மிகவும் பிரபலமாகிவிட்டது.

எனவே மர்ஹூம் முபல்லிக் ஹாஃபிழ் ஜிப்ரீல் ஸய்யிது அவர்கள் கரீபாஸ் நாட்டை அடைந்தபோது, அல்லாஹ் முன்னரே அவர்களுக்கு ஓர் உதவியாளரை வழங்கியிருந்தான். அவர் ஜமாஅத்திற்காக ஆயத்தமாகியிருந்தார்கள். ஒற்றை முஸ்லிமாக இருந்ததனால் பர்தா அணிந்ததனால் மற்றும் மக்களுக்கு தப்லீக் செய்து வந்ததனால் இவர்கள் பிரசித்திப் பெற்றிருந்தார்கள். இயக்கத்தின் முதல் முபல்லிக் ஜிப்ரீல் சாஹிப் அவர்கள் கரீபாஸுக்கு வந்தபோது மதிப்பிற்குரிய மேலே அனீஸா எய்பீ சாஹிபா பைஅத் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்துவிட்டார்கள்.

இயக்கத்தின் முபல்லிக் வசிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்தார்கள். வசதி வாய்ப்புகளை செய்து கொடுத்துவிட்டு தப்லீக் பணியில் அன்னார் ஈடுபட்டுவிட்டார்கள். அன்னாரின் தப்லீக்களால் பல மக்கள் ஜமாஅத்தில் இணைந்தார்கள். அன்னாருக்கு ஜமாஅத் மீது அதிக அன்பு இருந்தது. முரப்பிமார்களுக்கு மிகவும் கண்ணியம் அளித்து வந்தார்கள்.

மக்களின் கடுமையான எதிர்ப்பு இருந்தபோதிலும் அன்னாரின் ஈமான் ஒருபோதும் பலவீனமாகவில்லை. எங்கு சென்றாலும் பர்தா அணிந்து கொண்டே செல்வார்கள். அன்னாரின் இஸ்லாமிய ஆடையும் தப்லீக்கிற்கான வழியாக அமைந்தது. மக்கள் அன்னாரை ஏளனம் செய்தபோதிலும் சில வேளை ஏசிபேசியபோதிலும், தர்க்கம் செய்தபோதிலும், தொல்லை கொடுத்தபோதிலும் அன்னார் ஒருபோதும் ஈமானையும், பர்தாவையும் கைவிட்டதில்லை.

பர்தா அணிவது இறைவனுக்காக இருக்கும்போது, மக்கள் என்ன கூறுகிறார்கள் என்று நான் மக்களைப் பற்றி ஏன் கவலைப்படவேண்டும்? என ஓர் உன்னதமான முன்னுதாரணத்தை அன்னார் விட்டுச் சென்றுள்ளார்கள். ஆரம்பத்தில் அன்னார் தமது உள்ளத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டபோது அன்னாருக்கு தொழத் தெரியாது. எனவே ஸஜ்தா செய்யாமல் தனக்கு தெரிந்த வகையில் இறை வணக்கம் செய்ய அமர்ந்துவிட்டார்கள். அன்னாரின் தந்தை அவர் புதிய வகையில் வழிபடுவதைக் கண்டபோது கடுமையான கோபத்தை வெளிப்படுத்தினார். மேலும், திருக்குர்ஆனை கிழித்துவிடுவேன் என்று மிரட்டினார். அதற்கு பதிலளிக்கும் விதமாக மர்ஹூமா தமது தந்தையிடம் இவ்வாறு கூறினார்கள்:

பிறகு, ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இறைவனுக்கு முன்னால் ஸஜ்தா செய்ததாக கூறப்பட்டுள்ள பைபிளின் அந்தப் பக்கங்களையும் கிழித்து விடவேண்டும்.

ஆக, அன்னார் தமது கொள்கையில் மிகவும் வீரத்துடன் நிலைநின்றார்கள். பிறகு, அல்லாஹ்வின் அருளால் இயக்கத்தின் முபல்லிக் வந்ததனால் அன்னார் தொழக் கற்றுக் கொண்டார்கள். பிறகு, மக்களுக்கும் கற்றுக் கொடுத்தார்கள். உலகின் அந்த மூலையில் இருக்கும் மக்கள் அனைவரும் இஸ்லாத்தை தீய கண்ணோட்டத்தில் பார்த்து வந்தார்கள். அப்போது இந்த போராளி எழுந்து நின்று எல்லாரையும் எதிர்கொண்டார். மேலும், எந்த அச்சமும் இன்றி இஸ்லாத்தின் போதனைகளை வைத்தார். அல்லாஹ்வைத் தவிர, எவருக்கும் அஞ்சவில்லை.

இந்த சிறப்பின் காரணமாக பல மக்களுக்கும், பல அரசியல்வாதிகளுக்கும் அன்னார் மீது மதிப்பச்சம் இருந்தது. அல்லாஹ் எப்படி அருள் செய்தான் என்றால், அன்னாரின் மீதான இந்த மதிப்பச்சம் மற்றும் ஈமானின் உறுதிபாட்டின் காரணமாக அரசியல்வாதிகள் மீது எத்தகைய ஓர் அழுத்தம் ஏற்பட்டது என்றால், எந்த அளவு அன்னார் மீது தாக்கம் ஏற்பட்டது என்றால், ஜமாஅத் உடைய பதிவிலும் அவர்கள் ஒத்துழைப்பு வழங்கினார்கள். அது இதற்கு முன்பு எதிரிப்பினால் ஒப்புதல் அளிக்கப்படாமல் இருந்தது.

அன்னார் மீதான மதிப்பச்சம் எந்த அளவுக்கு இருந்ததென்றால், அன்னாரை அறிந்த பல மக்களும் இஸ்லாத்திற்கு எதிராக இருந்தபோதிலும் அன்னார் இருக்கும்போது அவர்களால் இஸ்லாத்திற்கு எதிரான எதிர்மறையான விஷயம் எதையும் பேச முடியாமல் இருந்தது. மக்கள் சென்று என்ன கேள்வி கேட்க விரும்பினாலும் கேட்கலாம் என்று அன்னார் தமது வீட்டை திறந்து வைத்திருந்தார்கள். தமது வீட்டில் எல்லாரும் முறையாக தொழுகையை பேணுமாறு வலியுறுத்திக் கூறிவந்தார்கள்.

நீண்ட காலத்துக்குத் தமது வீட்டைத் தொழுகை மையமாகவும் ஆக்கி வைத்திருந்தார்கள். அன்னாரின் மகன் பேஸாயீ இளமை வயதை அடைந்தபோது அவரை ஜமாஅத்திற்காக அர்ப்பணித்து ஜாமிஆ அஹ்மதிய்யா கானாவுக்கு அனுப்பி வைத்துவிட்டார்கள். மக்கள் அன்னாரை தடுப்பதற்கு அதிகம் முற்பட்டார்கள். ஏன்? உனது மகனை அங்கே அனுப்புகிறாய்? அவர்கள் உனது மகனை அங்கே கொன்றுவிடுவார்கள்? என்று கூறினார்கள்.

ஆனால், அன்னார் மிகவும் பெருமிதத்துடன் தமது மகனை அனுப்பினார்கள். ஆனால், அல்லாஹ்வின் நியதி என்னவாக இருந்தது என்றால், அஹ்மது பேஸாயீ ஆஃப்ரிக்காவிற்கு சென்று அங்கு மலேரியா காரணமாக நோய்வாய்பட்டுவிட்டார். அங்கு மரணமடைந்து விட்டார். அப்போது அதே மக்கள் வந்து கூறினார்கள்: பாருங்கள். இஸ்லாம் பொய்யான மார்க்கம் ஆகும். எனவேதான் உனது மகன் இறந்துவிட்டான். ஆனால், மேலே அனீஸா எய்பீ ஸாயீ சாஹிபா அதை சிறிதும் பொருட்படுத்தவில்லை. எந்த கவனமும் செலுத்தவில்லை. இஸ்லாத்தில் உறுதியாக நிலை நின்றார்கள். முன்னரை விட அதிகமாக இஸ்லாத்திற்காக மும்முரமாக ஆரம்பித்தார்கள். அன்னாரின் ஈமானிலும், எந்த வித்தியாசமும் ஏற்படவில்லை. அன்னாரின் பர்தாவும் மாறவில்லை. அன்னாரின் மற்ற பிள்ளைகளும் இஸ்லாத்தில் நிலைத்து நிற்கின்றார்கள். தப்லீக் பணியும் தொடர்கின்றது.

மர்ஹூமா தமக்குப் பின் மூன்று மகள்களையும், ஒரு மகனையும் விட்டுச் சென்றுள்ளார்கள். அல்லாஹ் அவர்களுக்கு பொறுமையை வழங்குவானாக. மேலும், அவர்களின் தாயைப் போன்று இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்திற்கு தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பையும் அவர்களுக்கு வழங்குவானாக.

மர்ஹூமா அங்கு விதைத்த விதையில் அல்லாஹ் பரக்கத்தை ஏற்படுத்துவானாக. அன்னாரின் விருப்பப்படி அந்த சிறிய தீவு அஹ்மதிய்யத்தின் அரவணைப்புக்குள் வந்துவிடட்டுமாக. அல்லாஹ் அன்னாரைப் போன்ற துணிச்சலான தனது முன்மாதிரியை நிலைநாட்டக்கூடிய தப்லீக்கிற்கான உத்வேகத்தை கொண்டிருக்கும் மற்றும் தமது ஈமானின் நிலைத்திருக்கக்கூடிய இத்தகைய பெண்மணிகளை மேலும் ஜமாஅத்திற்கு வழங்கிக் கொண்டே இருப்பானாக. முபல்லிக்மார்களை விடவும் அதிகமாக தப்லீக்கிற்கான உரிமையை செலுத்திய இத்தகைய தாய்மார்களை இன்னும் வழங்கிக் கொண்டே இருப்பானாக. அல்லாஹ் அன்னாருக்கு பாவமன்னிப்பு வழங்கி அன்னார் மீது கருணை புரிவானாக. அன்னாரின் படித்தரத்தை உயர்த்துவானாக. (ஆமீன்)

தமிழாக்கம் :

மவ்லவி அதாவுல் முக்ஃனீ

## மல்ஃபூஸாத் - முதல் பக்கத் தொடர்ச்சி...

பாரா முகத்துடன் நடந்து கொள்ளக் கூடாது.

ஒருமுறை நான் நடைபயணமாக சென்று கொண்டிருந்தேன். அப்துல் கரீம் என்னுடன் இருந்தார். அவர் சற்று முன்னால் இருந்தார். நான் பின்னால் (சென்று கொண்டிருந்தேன்). வழியில் ஒரு 70 அல்லது 75 வயதுடைய பலவீனமான பெண் ஒருவர் சந்தித்தார். அவர் ஒரு கடிதத்தை அவரை படித்துக் கூறும்படி கேட்டார். ஆனால், அவரோ அந்தப் பெண்ணை உதாசீனப்படுத்தி விட்டு விலகிவிட்டார். எனது உள்ளத்திற்கு வேதனை ஏற்பட்டது. அவர் அந்தக் கடிதத்தை என்னிடம் கொடுத்தார். நான் அதனை வாங்கிக் கொண்டு நின்றுவிட்டேன். அதனை வாசித்துக் காட்டி நன்றாக அவருக்கு புரிய வைத்துவிட்டேன். அதனால் அந்த ஊழியர் மிகவும் வெட்கத்திற்குள்ளானார். ஏனெனில், அவருக்கு நிற்கவேண்டியதும் ஏற்பட்டு விட்டது. மேலும் நற்கூலியிலிருந்து இழப்பிற்குரியவராகிவிட்டார்.

**ஜமாஅத்தின் எதிர்காலம் குறித்து ஓர் ஆன்மீகக் காட்சி**

எனக்கு தெளிவான ஆன்மீகக் காட்சியிலிருந்து இந்த விஷயம் தெரிய வந்துள்ளது. அதாவது நாடுகளும் இந்த ஜமாஅத்தில் இணையும். எந்த அளவுக்கு என்றால், அந்த நாடுகளும் எனக்கு (ஆன்மீகக் காட்சியில்) காட்டப்பட்டன. அவர்கள் குதிரைகளில் சவாரி செய்திருந்தனர்.

மேலும், நான் உமக்கு எதுவரை பரக்கத் வழங்குவேன் என்றால் அரசர்கள் உமது ஆடையிலிருந்து அருளைத் தேடுவர் என்றும் அல்லாஹ் (என்னிடம்) கூறியுள்ளான்.

அல்லாஹ் ஒரு காலத்திற்கு பிறகு, நமது ஜமாஅத்தில் அப்படிபட்ட மக்களை இணைத்துவிடுவான். மேலும், பின்னர் அவர்களுடன் ஓர் உலகமே கவனம் செலுத்தும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 415- காதியான் பதிப்பு 2018)

* * * * *

## தஃப்ஸீரே கபீர் - முதல் பக்கத் தொடர்ச்சி...

கூறினார்கள்: அல்லாஹ்வின் முழுமையான தோழமையை பெறுவதற்கு இரண்டு விஷயங்களுமே அவசியமாகும். அதாவது, முத்தக்கீயாகவும் இருக்க வேண்டும். மேலும், முஹ்ஸினாகவும் இருக்க வேண்டும்.

இந்த இடத்தில் இந்த விஷயத்தை நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது, இறையச்சமுடையவர் என்பதற்கு, உலகத்தைப் பற்றிய சிந்தனையே கொள்ளாதவர் என்று பொருள் அல்ல. அப்படிப்பட்ட நபரை திருக்குர்ஆன் அறிவீனர் என்று கூறியுள்ளது. எவருடைய ஒவ்வொரு செயலிலும் இறையச்சம் தென்படுகின்றதோ அவரே இறையச்சமுடையவர் ஆவார். எவர் எந்த பணியும் செய்வதில்லையோ அவரிடம் இறையச்சம் எங்கிருந்து உருவாகும்? முத்தகீ என்ற சொல்லே, அவர் அபாயத்தை எதிர் கொள்வார் என்று கூறுகிறது. ஆனால், இறைவன் அவரை பாதுகாக்கின்றான். எனவே எவர் உலகியல் பணிகளில் ஈடுபட்டு அதன் தீய தாக்கங்களிலிருந்து விலகியிருப்பாரோ அவரே இறையச்சமுடையவர் ஆவார்.

(நன்மை செய்பவராகிய) முஹ்ஸின் என்பவரைக் குறித்து நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது வீண்விரயம் செய்பவர் என்பது அதன் பொருள் கிடையாது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: உங்களது சந்ததிகள் மக்களிடம் யாசிக்கும் நிலையில் அவர்களை நீங்கள் விட்டுவிட்டுச் செல்வதை விட நீங்கள் உங்களது சந்ததிகளுக்காக செல்வத்தை விட்டுவிட்டுச் செல்வது சிறந்ததாகும்.

முஹ்ஸின் என்பதற்கு இந்தப் பொருளும் உள்ளது. அதாவது, உலகில் அழகை உருவாக்குகின்ற பணியைச் செய்யக்கூடியவர் என்பது ஆகும். எவர் தமது குடும்பத்தையே நாசமாக்கிவிட்டாரோ அவர் அழகை எப்படி உருவாக்குவார்? ஆக, எவர் தனது குடும்பத்தையும் பாதுகாத்து, உலகிற்கும் நன்மை செய்கின்றாரோ அவர் முஹ்ஸின் ஆவார். ஆயினும், தான் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து கொண்டு, செலவு செய்வதற்கான சந்தர்ப்பம் வரும்போது என்னிடம் ஒன்றும் இல்லை என்று கூறுவது என்பதும் அதன் பொருள் அல்ல.

அதேபோன்று, எவருடைய செயலின் விளைவு நல்லதாக அமையுமோ அவரே முஹ்ஸின் ஆவார்.

இந்த வசனத்தில் யூதர்கள் மற்றும் கிறித்தவர்களுடனான போரின் விளைவுகளும் கூறப்பட்டுள்ளன. அது என்னவென்றால், அல்லாஹ் முஸ்லிம்களுக்கு உதவி செய்வான். மேலும், எவருடன் இறைவன் இருக்கின்றானோ அவரை எவர் வெற்றி கொள்ள முடியும்? என்பது வெளிப்படையாகும்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 4, பக்கம் 276, காதியான் பதிப்பு 2010)

* * * * *

## தூதுச் செய்தி : 12-ம் பக்கத் தொடர்ச்சி...

வேண்டும் என்ற இந்த துஆவுடனும், இந்த எண்ணத்துடனும் பிள்ளைகளுக்காக நீங்கள் துஆ செய்ய வேண்டும்; பிள்ளைகளுக்காக ஆசை கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நன்மையில் எப்போதும் முன்னோக்கியே அடி எடுத்து வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கே இறை உதவி கிடைத்துக் கொண்டிருக்கின்றது.

கூறினார்கள்: (அவர்கள்) ஓரிடத்தில் நின்றுவிட மாட்டார்கள். அத்தகைய நபர்களின் முடிவே நல்லதாக அமைகின்றது. மேலும் நல்ல முடிவு ஏற்படுவதற்கு அன்னார் (அலை) கூறினார்கள்:

நீங்கள் உங்களுக்காகவும், உங்களது மனைவி மக்களுக்காகவும் நிரந்தரமாக துஆ செய்து கொண்டே இருக்க வேண்டும்.

நம்மில் ஒவ்வொருவரும் பிள்ளைகளுக்கு சிறந்த முன்மாதிரியாக திகழ்வதற்கும், உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கக் கூடியவர்களாக திகழ்வதற்கும் அல்லாஹ் நமக்கு நற்பேறு வழங்குவானாக. மேலும், அல்லாஹ் நமது பிள்ளைகளையும் எப்போதும் நமது கண்களுக்கு குளிர்ச்சி அளிப்பவர்களாக ஆக்கி வைப்பானாக. மேலும், இந்த தொடர் அடுத்தடுத்து சென்று கொண்டிருக்கட்டுமாக.

ஆமீன்.

வஸ்ஸலாம்

எளியவன்

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது

* * * * *

**உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?**

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

**நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.**

KHAIRUL-ISLAM
JAYGON-WEST BENGAL 97348 44732

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

தொலைபேசி எண் : 1800 103 2131

இந்த *TOLL FREE* எண்ணில் ∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

* * * * *

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத்**
**ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் உறுப்பினர்களுக்கு வழங்கிய தூதுச்செய்தி**
**(இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் வருடாந்திர இஜ்திமா, காதியான் - அக்டோபர் 21,22,23-2022)**

نَحْمَدُهٗ وَنُصَلِّیْ عَلٰی رَسُوْلِهِ الْکَرِیْمِ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِیْمِ وَعَلٰی عَبْدِهِ الْمَسِیْحِ الْمَوْعُوْدِ

MA 22-08-22
இஸ்லாமாபாத்
யூ.கே

அன்பிற்குரிய இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் உறுப்பினர்களுக்கு வழங்கிய தூதுச்செய்தி,

அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரகாத்தஹு

இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவிற்குத் தனது வருடாந்திர இஜ்திமாவை நடத்துவதற்கு நற்பேறு கிடைக்கின்றது என்பதை அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இந்த சந்தர்ப்பத்தில், தூதுச் செய்தி அனுப்புமாறு என்னிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அல்லாஹ் இதை எல்லா வகையிலும் வெற்றிக்குரியதாகவும், அருளுக்குரியதாகவும் ஆக்குவானாக. குத்தாம் மற்றும் அத்ஃபாலிடம் இதன் நல்ல விளைவுகளை வெளிப்படுத்துவானாக. ஆமீன்!

நினைவிற் கொள்ளுங்கள்! மார்க்க நோக்கத்திற்காக மட்டும் ஒரு சிறப்பான சூழலில் ஒன்றுகூடுவது, அல்லாஹ்வை நினைவு கூருவதற்காக ஒன்றுகூடுவது மற்றும் அவனது திருப்தியைப் பெறுவதற்காக ஒன்று கூடுவது, நிச்சயமாக அல்லாஹ்வின் அருட்களை ஈர்க்கின்றது. இத்தகைய சந்தர்ப்பங்களில் கலந்து கொள்ளக்கூடிய நீங்கள் செவிமடுக்கும் நல்ல விஷயங்களின்படி செயல்படுங்கள். நன்மை மற்றும் இயைச்சத்தை உங்களது அடையாளமாக்கிக் கொள்ளுங்கள். உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குங்கள். கிலாஃபத்துடன் இனணந்திருப்பதிலும், நன்றியுணர்விலும் மேலும் முன்னேறுங்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஜமாஅத்திற்கு மீண்டும், மீண்டும் இறையச்சத்திற்கான போதனையை வழங்கியுள்ளார்கள். அன்னார் நமக்கு இறைவனின் திருப்தியைப் பெறுவதற்காக இறையச்சத்தின் வழியில் செல்லுமாறு அறிவுறுத்திய வண்ணம் கூறுகின்றார்கள்:

முந்தைய அனைத்துத் தூய வேதங்களின சுருக்கம் இறையச்சம் ஆகும். இது தொடர்பாக அன்னார் (அலை) தமது ஓர் இறையறிவிப்பைப் பற்றிக் குறிப்பிட்டவாறு கூறுகின்றார்கள்:

இறைவன் புறமிருந்து பன்முறை இவ்வாறு இல்ஹாம் வந்துள்ளது; நீங்கள் இறையச்சமுடையவர்களாக ஆகிவிட்டால், இறையச்சத்தின் நுட்பமான வழிகளில் சென்றால், இறைவன் உங்களுடன் இருப்பான்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

நமது ஜமாஅத் உண்மையான இறையச்சம் மற்றும் தூய்மையை மேற்கொள்வதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? என்று எனது உள்ளத்தில் பெரும் வேதனை ஏற்படுகிறது. அடுத்து அன்னார் கூறுகிறார்கள்:

நான் எந்த அளவு துஆ செய்கிறேன் என்றால், துஆ செய்து செய்து பலவீனம் மேலாங்கிவிடுகிறது. சிலவேளை மயக்கம் அடையும் அளவு, உயிரே பிரியும் அளவு நிலைமை சென்று விடுகிறது. அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: ஜமாஅத் இறைவனின் பார்வையில் இறையச்சம் உடையதாக ஆகிவிடாத வரை இறைவனின் உதவி அதற்குக் கிடைக்க முடியாது. அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

அனைத்து முந்தைய தூய வேதங்கள், மற்றும் தவ்ராத், இன்ஜீல் போன்றவற்றின் போதனைகளின் சுருக்கம் இறையச்சம் ஆகும். திருக்குர்ஆன் ஒரே சொல்லில் (அதாவது இறையச்சம் எனும் சொல்லில்) இறைவனின் மகத்தான விருப்பம் மற்றும் திருப்தியை வெளிப்படுத்திவிட்டது.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நான் எனது ஜமாஅத்சை சேர்ந்த மக்களில், உண்மையான இறையச்சம் உடையவர்கள், உலத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குபவர்கள் மற்றும் இறைவனுக்காகத் தொடர்புகளைத் துண்டித்துக் கொள்பவர்கள் ஆகியோரை(ப் பிரித்துத்) தனியாக்க வேண்டும்; சில மார்க்கப் பணிகளை அவர்களிடம் ஒப்படைத்து விட வேண்டும் என்ற கவலையிலும் மூழ்கியுள்ளேன். பிறகு, நான் உலகத்தின் சுக துக்கங்களில் மூழ்கிக் கிடப்பவர்களையும், இரவும் பகலும் உலக நோக்கத்திற்காகவே உயிரை மாய்ப்பவர்களையும் நான் சிறிதும் பொருட்படுத்த மாட்டேன். (மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 303)

ஆக, எனது ஜமாஅத்தின் ஒவ்வொரு நபரும் இறையச்சத்தில் நடப்பவராக இருக்க வேண்டும். அதுவன்றி, எந்நேரமும் உலகத்தின் துன்பமே அவரை உண்ணும் அளவில் அவர் இருக்கக் கூடாது என்ற வேதனை அன்னாருக்கு இருந்தது.

கிலாஃபத்துடைய அருட்களைப் பற்றி நினைவு கூருவதும், ஜமாஅத் மக்களின் உள்ளங்களில் கிலாஃபத் உடனான தொடர்பையும், நன்றியுணர்வையும் அதிகப்படுத்துவதும் மிக உறுதியாக நிலைநாட்டுவதற்கு முயற்சி செய்வதும் தான் நமது இஜ்திமாக்களின் மிக முக்கியமான ஒரு நோக்கமாகும் என்பதையும் நினைவிற் கொள்ளுங்கள்.

சந்தேகமின்றி, கிலாஃபத் அல்லாஹ்விடமிருந்து கிடைத்த ஒரு மாபெரும் அருளாகும். அது இறுதி காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் அன்பிற்குரிய ஜமாஅத்திற்குக் கிடைக்கப் பெற்றுள்ளது. எனவே, இறைவனின் இந்தக் கயிற்றை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்வது நம் அனைவரின் கடமையாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். உங்களுடைய முன்னேற்றங்கள் கிலாஃபத்துடன் ஒன்றியிருக்கின்றன என்பதை நீங்கள் நன்றாக நினைவிற் கொள்ளுங்கள். எந்த நாளில் நீங்கள் இதைப் புரியவில்லையோ, மேலும் இதை நிலைப் பெறச் செய்யவில்லையோ அந்த நாளே உங்களது அழிவு மற்றும் நாசத்திற்கான நாளாக இருக்கும். ஆனால், நீங்கள் அதன் உண்மைத்துவத்தைப் புரிந்தவாறு இருந்தால் அதை நிலை பெறச் செய்தால் பின்னர், முழு உலகமும் சேர்ந்து உங்களை அழிக்க நினைத்தாலும் அழிக்க முடியாது.

அல்லாஹ் உங்களுக்கு இந்த இஜ்திமாவிலிருந்து முழுமையான முறையில் பயன் பெறுவதற்கான நற்பேறை வழங்குவானாக! அல்லாஹ் உங்களில் ஒவ்வொருவரையும் இந்த இஜ்திமாவுடன் தொடர்புடைய அருட்கள் அனைத்தையும் பெற்றுக் கொள்ளக் கூடியவர்களாக ஆக்குவானாக!

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள், இத்தகைய அருளுக்குரிய சபைகளில் கலந்து கொள்ளக் கூடியவர்களுக்காக செய்த தமது ஜமாஅத் மக்களுக்காக செய்த அந்த துஆக்கள் அனைத்திற்கும் வாரிசுகளாக நாம் அனைவரும் ஆவோமாக! ஆமீன்

வஸ்ஸலாம்

எளியவன்

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 01 December 2022 Issue No. 48

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

## ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இந்திய மஜ்லிஸ் அன்சாருல்லாஹ்வின் உறுப்பினர்களுக்கு வழங்கிய தூதுச்செய்தி

**(இந்திய மஜ்லிஸ் அன்சாருல்லாஹ்வின் 44வது வருடாந்திர இஜ்திமா, காதியான் - 2022)**

அக்டோபர் 21, 22, 23-2022 தேதிகளில், வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் காதியான் தாருல் அமானில் கிளை அமைப்புகளின் வருடாந்திர தலைமையக இஜ்திமாக்கள் நடைபெற்றன. அதில் பல்வேறு மார்க்க அமர்வுகள் மட்டுமின்றி மார்க்க மற்றும் விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்பட்டன. கோவிட்-19 தொற்றுக்குப் பிறகு இந்த வருடம் வருடாந்திர இஜ்திமாக்கள் மிக சிறப்புடன் நடத்தப்பட்டன. இதில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து ஜமாஅத் உறுப்பினர்கள் அதிக எண்ணிக்கையில் கலந்து கொண்டனர். அல்ஹம்துலில்லாஹ். இந்த சந்தர்ப்பத்தில் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பரிவுகூர்ந்து அனுப்பியிருந்த தூதுச் செய்தி வாசகர்கள் படித்து பயன் பெற வெளியிடப்படுகிறது.

نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

இந்திய அன்சாருல்லாஹ் மஜ்லிஸ்களின் அன்பிற்குரிய உறுப்பினர்களே!

அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காதஹு

இந்திய மஜ்லிஸ் அன்சாருல்லாஹ்விற்குத் தனது வருடாந்திர இஜ்திமாவை நடத்துவதற்கு நற்பேறு கிடைக்கின்றது என்பதை அறிந்து நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். அல்லாஹ் இதை எல்லா வகையிலும் வெற்றிக்குரியதாகவும், அருளுக்குரியதாகவும் ஆக்குவானாக. ஆமீன்! இந்த சந்தர்ப்பத்தில், தூதுச் செய்தி அனுப்புமாறு என்னிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

உங்களது பிள்ளைகளின் தர்பிய்யத்தின் பக்கம் சிறப்புக் கவனம் செலுத்துங்கள். அவர்களுக்காக நேரம் ஒதுக்குங்கள். அவர்களின் கல்வியின் பக்கம் கவனம் செலுத்துங்கள். அவர்களை ஜமாஅத்துடன் இணைப்பதன் பக்கம் கவனம் செலுத்துங்கள். உங்களது குடும்பத்தில் பிள்ளைகளுக்கு நல்ல தர்பிய்யத் நடைபெறும் சூழலை உருவாக்குங்கள். பிள்ளைகள் சமூகத்தின் ஒரு நல்ல அங்கமாக மாறி நாட்டின் முன்னேற்றத்தில் பங்களிப்பு செலுத்தக் கூடியவர்களாக ஆக வேண்டும் என்பது எனது தூதுச் செய்தியாகும்.

பிள்ளைகளின் தர்பிய்யத் ஒன்றும் எளிதான பணி அல்ல என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அதிலும், குறிப்பாக ஒவ்வொரு அடியிலும் ஷய்த்தான் உருவாக்கி வைத்துள்ள பலதரப்பட்ட மனம் கவரும் விஷயங்கள் அனுதினமும் நம் முன்னால் வந்து கொண்டிருக்கும் இக்காலத்தில் இந்த பணி மிகவும் கடினமானது ஆகும். ஆனால், அல்லாஹ் நமக்கு துஆக்கள் மற்றும் வழிமுறைகளை கற்றுத் தந்துள்ளான். எனவே, நாம் விரும்பினால், நாம் நம்மையும், நமது பிள்ளைகளையும் ஷய்த்தானின் தாக்குதல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எந்த புரட்சியை உருவாக்குவதற்காக உலகில் அல்லாஹ்வின் புறமிருந்து அனுப்பப்பட்டுள்ளார்களோ அதன் அங்கமாக மாறுவதற்கு நாம் நமது அனைத்து ஆற்றல்களையும், தகுதிகளையும் பயன்படுத்த வேண்டும். நமது சந்ததிகளிடமும் அந்த ஆன்மாவை ஊத வேண்டும். நமது நோக்கங்களுக்காக துஆக்களும் செய்ய வேண்டும். சமூகத்தில் அனைத்து அசுத்தங்களும் தீமைகளும் இருந்தபோதிலும் நாம் ஷய்த்தானை வெற்றியடைய செய்து விடக் கூடாது. மேலும் உலகில் இறைவனின் ஆட்சியை நிலைநாட்டுவதற்கு முயல வேண்டும். இன்ஷா அல்லாஹ்

திருக்குர்ஆனில், சூரா அன்பியாவில் ஸக்கரிய்யா (அலை) அவர்கள் தொடர்பாக இந்த துஆவைக் குறித்தும் குறிப்பு கிடைக்கின்றது:

رَبِّ لَا تَذَرۡنِیۡ فَرۡدًا وَّاَنۡتَ خَیۡرُ الۡوٰرِثِیۡنَ

என் இறைவா! என்னைத் தனித்தவனாக விட்டு விடாதிருப்பாயாக! வாரிசாக இருப்பவர்களுள் நீ மிகச் சிறந்தவனாவாய்.

இந்த துஆவில் அல்லாஹ்வை خَیۡرُ الۡوٰرِثِیۡنَ என்று கூறப்பட்டிருக்கும்போது, உலகியல் விவகாரங்களுக்கு வாரிசுகள் உருவாக வேண்டும் என்பதற்காக மட்டும் பிள்ளைப் பேறுக்காக துஆ செய்யக் கூடாது என்பது இதிலிருந்து தெளிவாகிறது. மாறாக, உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குகின்ற வாரிசுகள் அல்லாஹ்வின் புறமிருந்து வழங்கப்பட வேண்டும் என்று துஆ செய்ய வேண்டும். உலகத்தை விட மார்க்கத்திற்கு சுயம் முன்னுரிமை வழங்குகின்ற மக்களால் தான் இப்படிப்பட்ட துஆக்களை கேட்க முடியும். உலகியல் விவகாரங்களில் மனிதன் மூழ்கியிருந்தால் அவன் எப்படி நல்ல வாரிசை வேண்டுவார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

எனவே நீங்கள் முதலில் நல்லவராக ஆகுங்கள். மேலும், உங்கள் பிள்ளைகளுக்கு நன்மையிலும், இறையச்சத்திலும் நல்ல முன்மாதிரியாக ஆகிவிடுங்கள். மேலும், அவர்களை மார்க்கப் பற்று மிக்கவர்களாகவும், இறையச்சமுடையவர்களாகவும் ஆக்குவதற்கு முயற்சியும், துஆவும் செய்யுங்கள். அவர்களுக்காக செல்வத்தை சேமிப்பதற்காக நீங்கள் எந்த அளவுக்கு முயற்சிகள் செய்கின்றீர்களோ அதே அளவிற்கு இந்த விவகாரத்திற்காக முயற்சி செய்யுங்கள். (மல்ஃபூஸாத், தொகுதி 8, பக்கம் 109, பதிப்பு-1985, வெளியீடு-இங்கிலாந்து)

ஒரு சிறப்பான சூழலில் மார்க்க நோக்கங்களுக்காக ஒன்று கூடுவது, அல்லாஹ்வை நினைவுகூருவதற்காக ஒன்று கூடுவது, அவனது திருப்தியை பெறுவதற்காக ஒன்று கூடுவது நிச்சயமாக அல்லாஹவின் அருட்களை ஈர்க்கின்றது.

எனவே, உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கக் கூடிய, தாய், தந்தை மற்றும் குடும்பத்தின் கண்ணியத்தை நிலை நாட்டக்கூடிய, மேலும், தமது பாட்டனார் மற்றும் தந்தை வழி பாட்டனாரின் பெயரின் கண்ணியத்தை நிலை நாட்டக் கூடிய பிள்ளைகள்

இதன் தொடர்ச்சி 10ம் பக்கம்...

**National Watch Company**
**Sales & Service**



**B. Mohamed Adil**
93632 06679
99433 38000

196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad